# இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகம்
## வருடாந்த அறிக்கை 2011

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகம்**

**வருடாந்த அறிக்கை 2011**

## பொருளடக்கம்


| உள்ளடக்கம் | பக்கங்கள் |
|---|---|
| மீள்நோக்கு – பொருளாதார அபிருத்தி அமைச்சர் | 5 |
| நோக்கு மற்றும் இலக்கு | 6 |
| கூட்டுறவு தகவல் | 7 |
| முகாமைத்துவ சபை | 8 |
| தலைவரின் செய்தி | 9 |
| சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாடுகள் | 10 – 14 |
| நிகழ்வுகள் | 15 – 19 |
| விளம்பரம் மற்றும் உற்பத்தி | 20 – 22 |
| பொதுசனத் தொடா்பு மற்றும் ஊடக பிரசித்தம் | 23 – 46 |
| மனித வளஇ நிருவாகம் மற்றும் நிதி | 47 – 61 |

## மீள்நோக்கு-பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்



### கௌரவ. பசில் ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

2009 மே 19 ஆம் திகதி மேன்மைதங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததுடன் நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்தினார். உல்லாசப்பிரயாணத் துறையை முன்னெடுத்துச் செல்வதற்கு இது பாரிய நன்மையளித்துள்ளது.

உல்லாசப் பிரயாணிகளின் வருகை 2009இல் 447,890 இலிருந்து 2010 இல் 654.476 வரையிலும் 2011இல் 855,975 ஆகவும் படிப்படியாக அதிகரித்துள்ளது.உல்லாசப் பிரயாணிகளின் வருகை 2012 இல் ஒரு மில்லியனைவிட அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.அத்துடன் 2016ஆம் ஆண்டிற்குள் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை 2.5 மில்லியன் அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது.

உல்லாசப் பிரயாணத்துறை அதன் நீண்ட கால நிலைப்பாடு ஏனைய துறைகளின் பொருளாதார வளர்ச்சியிலும் தங்கியுள்ளது.உல்லாசப் பிரயாணத் துறையை நேரடியாக அல்லது மறைமுகமாகப் பயனளிக்கும் பல திட்டங்களில் அரசு பாரியளவில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. உதாரணமாக ஹம்பாந்தோட்டை மத்தளையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இரண்டாவது சர்வதேச விமான நிலையம் 2013 முடிவடைவதற்குள் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமும் மெருகூட்டப்பட்டு தரமுயர்த்தப்பட்டுள்ளது.அரசு எமது வீதி மற்றும் புகையிரத வலைப்பின்னல்களை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையின் கொழும்பு மற்றும் காலிக்கு இடையிலான முதலாவது அதிவேக பாதை 2011 நவம்பர் 27ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. 2011 ஒக்டோபர் 07ஆம் திகதி அதிசொகுசு தொடர்வண்டி தனிப்பிரிவு கொழும்பு கண்டி குளிரூட்டப்பட்ட நகர சேவைக்குச் சேர்க்கப்பட்டுள்ளது.கோட்டையிலுள்ள டச்சு ஆஸ்பத்திரித் தொகுதி மற்றும் கடைத்தொகுதி மற்றும் உணவு உண்ணும் நிலைய மாக மாற்றப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்ப கலை சிறப்பம்சங்களுடன் நிர்மாணிக்கப்பட்டு 1288 மொத்த ஆசன கொள்ளளவைக் கொண்டுள்ள நெலும் பொக்குன மகிந்த ராஜபக்ஷ, அரங்கு 2011 டிசம்பர் 15ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. 2012ஆம் ஆண்டிற்குள் உல்லாசப் பிரயாணத்துறை பில்லியன் டொலர் வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்ற கைத்தொழில் ஒன்றாகத் திகழவுள்ளது.

உல்லாசப் பிரயாணத் துறையில் விரைவான வளர்ச்சி இலங்கையருக்கு அதிக தொழில் வாய்ப் புக்களை உருவாக்கியுள்ளது.முழுநாடுமே தற்பொழுது உல்லாசப்பயணத் துறைக்காகத் தீறந்து வைக்கப்பட்டுள்ளது.அத்துடன் உல்லாசப் பயணிகள் தற்பொழுது வட மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் எந்தவொரு பாகத்திற்கும் இடைஞ்சலின்றி விஜயம் செய்யக் கூடியதாகவுள்ளனர்.

இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் வாழ்கின்ற மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய முறையில் உல்லாசப் பிரயாணத் துறையை முன்னெடுத்துச் செல்வதே எமது இறுதியான நோக்கமாகும்.

**நோக்கு**

உல்லாசப் பயணத்துறை பங்குதாரர்களுக்கும் மற்றும் இலங்கை மக்களுக்கும் நன்மை பயக்கும் அத்துடன் மிகப்பெரிய வெளிநாட்டு நாணயமாற்று வருமானத்தை ஈட்டித்தரும் துறையாக அதன் முகப்புத் தோற்றத்தை ஓர் ஆசிய உல்லாச அடையாளச் சின்னமாக அதன் முகப்புத் தோற்றத்தைதோற்றுவித்து தொழில் முயற்சியை வழங்குகின்ற உறுதியான தன்மை மற்றும்

கலாசாரத்துடன் அதன் அழகான கடல்கள் மகத்தான மற்றும் சிநேகபூர்வமான மக்களைக் கொண்ட பசுமையான மற்றும் ஆசியாவின் மிக்க நிதி வளம் பொருந்திய இலங்கையை உருவாக்குவதும் அந்த நிலையைப் பெறுவதுமேயாகும்.

**இலக்கு**

- மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்ற வகையில் மிகத் தேவையான அத்தியாவசிய விட யங்களின் பராமரிப்பு மேம்பாடு மற்றும் அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.

- உல்லாசப் பிரயாணிகளின் பாதுகாப்பை மையமாகக் கொண்ட திருப்தி மற்றும் பிரகாசத்தை அடிப்படையாகக் கொண்ட உயர்தர உற்பத்தி மற்றும் சேவையை நிறுவதலும் உயர்த்துதலும்.

- உல்லாசப் பிரயாணத் துறையில் முதலீட்டை நிலை நிறுத்துவதற்கும் வளரச் செய்வதற்கும் உல்லாசப் பிரயாணிகளை பெருகச் செய்கின்ற பரிமாணம் மற்றும் விளைவு மட்டத்தை உறுதிப்படுத்தல்.

- இலங்கையை வளம் பொருந்திய தீவு என்ற நிலைமையை ஏற்படுத்துதலும் பலம் பொருந் திய வாடிக்கையாளர்களிடையே உயர் சிந்தனை பொருந்திய இலக்காக கார்பன் நடுநிலை பேணும் உல்லாசப் பிரயாண புவி சுவாசத்தைக் கொண்டுள்ள நாடாக வைத்திருத்தல்.

- தொழில்சார் துறை திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சியளித்தல் அபிவிருத்தி ஊடாக இத்தொழிற்துறையின் மனிதவள தேவைகளை எதிர்கொள்ளல்.

- இலங்கை உல்லாசப் பிரயாணத்துறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத் துவதற்கு இத்தொழிற்துறையினுள்ளும் அதற்கு வெளியேயுமுள்ள நிலையம் மற்றும் பிராந்தியங்களிலுமுள்ள மரபு வழியான மற்றும் மரபுவழியற்ற துறைகளிலுள்ள எல்லா பங்குதாரர்களையும் சார்ந்திருத்தல்.

- இலங்கையர்களின் பிரயாணத் தேவைகளுக்குச் சிறந்த சேவையாற்றுவதற்கு உள்நாட்டு உல்லாசப் பிரயாணத்துறை அடிப்படையை விரிவுபடுத்தலும் சர்வதேச உல்லாசப் பிரயா ணத்துறை சிறந்த முறையில் மேம்படுத்த உதவி புரிதலும்.

# தலைவரின் செய்தி



**கலாநிதி நாலக்க கொடஹேவா, தலைவர், இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை**

2011இல் உல்லாசப் பிரயாணிகளின் வருகைகள் 30.8% ஆல் அதிகரித்துள்ளது.வருகைகளின் விதிகளின் கீழ் இந்தியா உல்லாசப் பிரயாணத்தைப் பரவச் செய்கின்ற நாட்டில் முதன்மையானதாகும்.அதைத் தொடர்ந்து யுகே மற்றும் ஜேர்மனி என்பவை இரண்டாவது மற்றும் மூன்றாவது உல்லாசப் பிரயாணி பரவச் செய்கின்ற மிக உயர்ந்த˙.நாடுகளாகும்.

இலங்கை தற்பொழுது உல்லாசப் பிரயாணத்துறையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஊக்கமூட்டுகின்ற ஒரு சூழ்நிலையைக் கொண்டிருக்கின்றது.யுத்த சூழ்நிலையின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசு உல்லாசப் பிரயாணத் துறையை ஒரு முன்னுரிமை பெற்ற துறையாகக் கருதுகின்றது.

2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க உல்லாசப் பிரயாணத்துறை சட்டத்தின் பிரிவு 6(2) இன் விதிகளின் கீழ் இலங்கை உல்லாசப் பிரயாண அபிவிருத்தி அதிகார சபை 2011-2016 காலப் பகுதிக்கான உல்லாசப் பிரயாணத் துறை அபிவிருத்தி செயற் திறன் திட்டத்தைத் தயாரித்துள்ளதுடன் அமுல்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

பிரதான நோக்கங்கள்:

- 2010 இல் 654,476 இலிருந்து 2016 இற்குள் 2.5 மில்லியன் வரை உல்லாசப் பிரயாணிகளின் வருகையை அதிகரிக்கச் செய்தல்.
- 5 ஆண்டுகளுக்குள் நாட்டுக்கு வெளிநாட்டு நேரடி முதலீடாக (FDI) 3000 மில்லியன் யுஎஸ் டொலரைப் பெற்றுக்கொள்ளல்.
- 2010 இல் உல்லாசப் பிரயாணத்துறை தொடர்பான வேலைவாய்ப்பினை 125000 இலிருந்து 2016 இனுள் 500,000 வரை அதிகரிக்கச் செய்தல் மற்றும் நாடு பூராகவும்உல்லாசப் பிரயாணத்துறை அடிப்படையான தொழிற்துறை மற்றும் சேவைகளை விரிவுபடுத்தல்.
- சமூகத்தின் பெருமளவிலான பிரிவினருக்கு உல்லாசப் பிரயாணத் துறையின் பொருளாதார நலன்களை விநியோகித்தல் மற்றும் அசலான பொருளாதாரத்துக்குஉல்லாசப் பயணத்துறையை ஒருங்கிணைத்தலும்.
- வெளிநாட்டு செலாவணி வருமானங்களை 2010 இல் யுஎஸ் டொலர் 500 மில்லியனிலிருந்து 2016 இற்குள் யுஎஸ் டொலர் 2.75 பில்லியன் வரை அதிகரிக்கச் செய்தல்.

- இலங்கையின் உலகளாவிய வர்த்தக மற்றும் பொருளாதார இணைப்புக்களை அபிவிருத்தி செய்வதில் பங்களிப்புச் செய்தல்.
- இலங்கையை உல்லாசப் யணத்துறைக்கான உலகின் மிக நிதி வளம் பெற்ற நாடாக வைத்திருத்தல்.

உல்லாசப் பிரயாணத் துறை தொடர்ந்‘து வளர்ச்சியடையும் எனவும் இதன் பயனாக நாட்‘டு மக்களின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரம் வளர்ச்சியடைவதற்கு நன்மை பயக்குமெனவும் நாம் நம்புகின்றோம்.

# கூட்டுறவு தகவல்

**பெயர்** -- இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகம் (SLTPB)

**சட்ட வடிவம்** -- 2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க உல்லாசப்பயணத்துறை சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச நியதிகள் நிறுவனம் (2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க உல்லாசப்பயணத்துறை புதிய சட்டம் 2007 ஒக்டோபர் 1ஆம் திகதி அமுலுக்கு வந்தது. 38ஆம் இலக்க உல்லாசப் பயணச்சட்டத்தின் பிரிவு 67 (1) இகற்கமைய 1966 ஆம் ஆண்டு 10ஆம் இலக்க இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது; ஆகவே
இலங்கை உல்லாசப் பிரயாணச் சபை 2007 செப்டெம்பர் 30ஆம் திகதி தொடக்கம் செயற்பாடுகளை நிறுத்தியது. அப்போதைய உல்லாசப் பிரயாணச் சபையின் புஜமாகிய உல்லாசப் பிரயாண மேம்பாடுகள் SLTPB இன் கீழ் வந்தது.

**அலுவலகங்கள்** -- தலைமையகம், இல. 80, காலி வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ளது. (உல்லாசப் பிரயாண தகவல் நிலையங்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்க கண்டி மற்றும் சிகிரியாவிலும் உள்ளன.

**கணக்காய்வாளர்கள்** --- இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்** -- இலங்கை வங்கி

SLTPB இன் பங்கு-பின்வரும் செயற்பாடுகள் மூலம் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அதன் பங்குதாரர்களிள் ஆர்வமுள்ள பொருளாதார நன்மையடையும் பரம்பரை மற்றும் இலங்கை உல்லாசப் பயண உற்பத்தி வழங்களின் விநியோகத்தில் இலங்கை உல்லாசப் பிரயாண கைத்தொழிலுக்கு நிலையான சர்வதேச தேவைகள் அனுபவங்கள் மற்றும் தூண்டுதல் வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்புக்கு ஊக்கமளித்தல்.

- ஒரு தெளிவான தூர எல்லையில் சந்தைப்படுத்தல் உபாயங்களை நிறுவுதலும் தலைமை வகித்தலும்.
- போட்டியிலிருந்து உபாயரீதியாக வித்தியாசங்களை ஏற்படுத்துகின்ற நிர்ப்பந்திக்கப்படுகின்ற தூர எல்லை பிராண்டை தொடர்பு படுத்தல், மேம்படுத்தல் மற்றும் உருவாக்குதல்.
- விருந்தினர் வருகையை அடைந்து கொள்வதற்காக விற்பனைகளை இலகுவாக்குதல் மற்றும் பாரம்பரிய மற்றும் இன்டர்நெட் சுற்றாடல் ஊடாக எழுச்சிபெற்று வருகின்ற இரண்டி னதும் விநியோக வலைப்பின்னல் விநியோகத்தில் தொடர்புபடுத்துவதன் மூலமும் ஒத்துழைப்பு மூலமும் வருமான நோக்கங்களை அடைந்து கொள்ளல்.
- குறிக்கோளாகக் கொண்ட சந்தைப் பிரிவுகளின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கமைய ஒத்ததன்மையான இலங்கை உல்லாசப் பிரயாணத்தின் அனுபவங்களின் அபிவிருத்தியை இனம் காணுதல் மற்றும் ஒத்துழைத்தல்.
- இலங்கை உல்லாசப் பிரயாண உற்பத்திகள் மற்றும் சேவைகள் பிராண்ட் மற்றும் பிராண்ட்நீலை நிறுத்தும் உபாயங்களை உயிரோட்டமுள்ள பிராண்டுகளின் எல்லா பிரிவுகளையும் உறுதிப்படுத்தல்.

- வியாபார திட்டமிடல் மற்றும் அபிவிருத்தியில் தமது சொந்த உபயோகத்திற்காக சம்பந்தப்ப்பட்ட கைத்தொழில் பங்குதாரர்களுக்கு தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் அவர்களுடனான தொடர்பாடலை அபிவிருத்தி செய்வதற்கான பிரதான உள்ளகக் கண்ணோட்டம் மற்றும் போக்குகளைச் சேர்த்து மாற்றமடைந்து வருகின்ற சர்வதேச உல்லாசப் பிரயாண கைத்தொழிலைக் கண்காணித்தல்.
- நிறுவனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதில் செயற்பாடுகளை எளிதாக்குதல் மற்றும் ஒத்துழைப்பதில் உதவமுடியுமான நிறுவனங்களுடன் நெருங்கி கருமமாற்றுதல்.

**பணியகத்தின் நோக்கங்கள் :**

- இலங்கை உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி அதிகார சபையுடன் ஆலோசித்து உல்லாசப் பயண அபிவிருத்தித் திட்டத்திற்கமைய தரம் வாயந்த உல்லாசப் பிரயாணி மற்றும்பிரயாண எல்லை என்ற வகையில் இலங்கையின் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டுக் கருமங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுதல்.
- தெற்காசிய பிராந்தியத்திற்கு ஒரு நுழைவுவாயிலாக இலங்கையை வளர்த்தல்.
- இப்பிராந்தியத்தில் உல்லாசப் பிரயாண முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியில் மேன்மைபெற்ற நிலையமாக இலங்கையை பிரசித்தப்படுத்தல் .

# முகாமைத்துவ சபை

## 1. சிரேஷ்ட முகாமைத்துவம்

| பதவி | பிரிவு | முழுப்பெயர் | தற்போதைய பதவிநிலையில்சேவைக்காலம் --ஆரம்பிக்கப்பட்ட மற்றும்முடி வடைந்த திகதி |
|---|---|---|---|
| தலைவர் | SLTPB&SLTDA | கலாநிதி நாலக்க கொடஹேவா | 1 ஜன2011-31 டிசம் 2011 |
| பதில்முகாமைத்து வப்பணிப்பாளர் | SLTPB | திரு.எம்.பி. கிரியெல்ல | 1 ஜன2011-31டிசம்2011 |
| முகாமைத்துவப் பணிப்பாளர் | SLTPB | திரு.ரூமி ஜௌபர் | 16 மே 2011-31 டிசம் 2011 |
| பதில் சந்தைப்படுத்தல்-பணிப்பாளர் | SLTPB | செல்வி.மதுபானி பெரேரா | 1 ஜன2011-31டிசம் 2011- |

## 2. சபை அங்கத்தவர்கள்


| புதவி | முழுப்பெயர் | தற்போதைய பதவிநிலையில்சேவைக் காலம்-ஆரம்பிக்கப்பட்ட மற்றும் முடிவடைந்த திகதி |
|---|---|---|
| தலைவர் | கலாநிதி நாலக்க கொடஹேவா | 1 ஜனவரி 2011-31 டிசம் 2011 |
| சபை அங்கத்தவர் | திரு.சீனிவாசகம் கலைச்செல்வம் | 1 ஜனவரி 2011-31 டிசம் 2011 |
| சபை அங்கத்தவர் | கலாநிதி பி.எம்.சுனேத்பட்டகொட | 1 ஜனவரி 2011-31 டிசம் 2011 |
| சபை அங்கத்தவர் | திரு.பாஷ்வர எஸ்.குணரத்ன | 1 ஜனவரி 2011-31 டிசம் 2011 |
| சபை அங்கத்தவர் | திரு.நில்மின் நாணயக்கார | 1 ஜனவரி 2011-31 டிசம் 2011 |
| சபை அங்கத்தவர் | திரு.மேர்வின்பெர்ணாண்டோபுள்ளே | 1 ஜனவரி 2011-31 டிசம் 2011 |

## 2011 இல், SLTPB

**“கவர்ச்சிஊட்டும் மற்றும் ஒருமித்த இலங்கையின் புதுமுகத்தைச் சமர்ப்பித்தல்”**

ஊலகளாவிய பிரயாணிகளிடையே விருப்பத்திற்குரிய இடமாக இலங்கையைக் காண்பிப்பதற்கு SLTPB அதன் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு ஆரம்ப முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. 2011 இல் இலங்கையில் வருகை தந்த மொத்தம் 855,975 உல்லாசப்பிரயாணிகள் எனக் கணக்கிடப்பட்ட உல்லாசப் பிரயாணிகளை பரவச் செய்கின்ற 10 சிறந்த நாடுகளில் பிராண்ட் மீள் அமைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.உலகத்தைச் சூழவுள்ள ஏனைய நாடுகளில் நன்மதிப்பைக் கட்டியெழுப்புவதற்கு பிரயாணம் செய்து கண்டுபிடிக்கும் வாய்ப்புக்கள் இருந்துள்ளன.

**இலங்கைக்கு பரவச்செய்யும் சிறந்த 10 நாடுகளிலிருந்து 2011இல் வருகைகள் (உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை)**




பிராந்தியங்களின் சந்தை மூலம் இரண்டு பெரிய சந்தைகள் கீழைத்தேச ஐரோப்பா மற்றும் ஆசியா என்பன 2011 ஆண்டின்பொழுது முறையே 38% மற்றும் 40.6% அதிகரிப்பைக் கொண்டிருந்தது.ஏனைய எல்லா சந்தை பிராந்தியங்களிலும் அதாவது: வட அமெரிக்கா மேற்கு ஐரோப்பா ஆபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலாசியா லத்தீன் அமெரிக்கா மற்றும் கெப்பிரியன் இக்காலப் பகுதியில் ' முக்கியமான அதிகரிப்புக்களுடன் சாதனை படைத்துள்ளது

மேற்கூறப்பட்ட காலப் பகுதியில் கணிப்பிடப்பட்ட மிக முக்கியத்துவம் வாய்ந்த அதிகரிப்பு பிரான்ஸ்.-55.6%, ருஷ்யா-61% சீனா 56% ஜப்பான் 43%, இந்தியா 35.1% நெதர்லாந்து 34 %, மற்றும் மத்திய கிழக்கு 53% ஆகவும் இருந்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள இலங்கை உல்லாசப் பிரயாண அபிருத்திப் பணியகம் உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலின் சந்தைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தித் தொழிற்பாடுகள் அனைத்திற்கும் பொறுப்பானதாகும். இது யுகே சந்தைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தித் தொழிற்பாடுகளை அமுல் படுத்துவதற்கு யுகே இல் ஒரு வெளிநாட்டு அலுவலகமொன்றை இயக்குகின்றது. மேலும் குறிப்பிட்ட வெளிநாட்டு தூது கோஷ்டி ஊடாக ஏனைய எல்லா சந்லதப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை SLTPB மெற்கொள்கின்றது.

பின்வரும் நாடுகளில் பிரயாண மற்றும் பொழுதுபோக்கு சந்தைகள் மற்றும் வீதிகளில் விருப்பத்திற்குரிய துார எல்லையாக இலங்கை காண்பிக்கப்பட்டுள்ளது.:

| | | | | |
|---|---|---|---|---|
| நியுயோக் | ஜேர்மனி | இந்தியா | டுபாய் | ஜப்பான் |
| லண்டன் | சீனா | வீயட்னாம் | நெதர்லாந்து | |
| பிரான்ஸ் | ருஷ்யா | இத்தாலி | சுவீடன் | |

## சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாடுகள்.

### யூ. கே (ஐக்கிய ராச்சியம்)

- **செல்சியா மலர் கண்காட்சி லன்டன் - 23, 28 மே 2011.**

“ரோயல் ஹோர்டிகல்ச்சர் ஸொஸைட்டி” (RHS) இனால் லன்டனில் ஒழுங்கு செய்யப்பட்ட செல்சியா மலர் கண்காட்சியினுாடாக SLTPB இலக்கு பற்றிய விழிப்புணர்ச்சியை உருவாக்கியது. இக்கண்காட்சி 157,000க்கு மேற்பட்டவர்களால் கவரப்பட்டதுடன், அதிமேன்மைக்குரிய பிரிட்டிஷ் மகாராணியார் கலந்து கொண்ட ஐக்கிய ராச்சிய சமூகக் கலண்டரில், கௌரவமானதொரு மாலை பொழுதில் விலைப்பட்டியல் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. மகா பிரித்தானிய ஓர்க்கிட் சங்கத்தின் (OSGB) காட்சி ஆதாரத்தை SLTPB ஏற்பாடு செய்திருந்தது.

**உலக பிரயாண சந்தை 2011 (WTM) - லண்டன் 7 - 10 நவம்பர் 2011.**

பிரயாண கைத்தொழிலுக்கான (**2வது மாபெரும்**) பீ2பீ பிரயாண சந்தையாக எக்ஸெல் நிலையத்தில் நடைபெற்ற WTM 2011 உலகம் பூராவும் பிரயாணம் மற்றும் உல்லாசப் பயணத்துறைக்கான, “வியாபாரத்துக்கு வியாபாரம்” நான்கு நாள் கண்காட்சி. கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டியதில் ஒன்றாகும். 2012 மற்றும் அதனைத் தொடர்ந்தும் தீவில் உல்லாசப் பயணத்திற்கான பிரதான செய்திகளைத் தொடர்பாடுவதற்கு பிரயாண, ஹோட்டல் மற்றும் உபசார கைத்தொழிலைப் பிரதிநிதிப்படுத்துகிற 49 இலங்கை கம்பனிகளுடன் இணைந்து இலங்கை உல்லாசப்பயண துறை பங்குபற்றியது.

இந்த ஆதாரம் மேன்மை தங்கிய "கலாநிதி" க்ரிஸ் நோனிஸ் மற்றும் கைத்தொழில் பங்குதாரர்களினால், அதிகாரிகளால் (ஸ்ரீ லங்கா எயார் லைன்ஸ், SLTPB, SLAITO, THASL மற்றும் ASMET) சம்பிரதாயபூர்மாக திறந்து வைக்கப்பட்டது. காலைப் பொழுதில் மிஸ் வேர்ல்ட் இற்கான மிஸ் ஸ்ரீ லங்கா செல்வி புஷ்பிகா டி சில்வா ஆகியோரும் திறப்பு விழாவில் கலந்து கொண்டமை நல்லதோர் கண்ணோட்டமாகும். ஸ்ரீ லங்கா எயார் லைன்ஸுடன் கூட்டாக மேலும் 1 டாக்ஸி நடவடிக்கை WTMமின் பொழுது நடைபெற்றது.

**சீனா**

- **குவாங்சூ சர்வதேச பிரயாண சந்தை (GITF) 21-26 மார்ச் 2011, மற்றும் சென்ஸேன் - குவாங்சூ வீதி கண்காட்சி.**

70,000 விருந்தினர்கள் மற்றும் 25,000 வியாபாரிகள் கொள்வனவாளர்களைக் கவர்ந்த தென் சீனாவை மேம்படுத்துவதற்கான ஒரே பிரயாணச் சந்தை GITF ஆகும். பலம் வாய்ந்த சீனப் பிரயாணிகள் மற்றும் உலகளாவிய பங்கு கொண்டோர்களது இலங்கை ஆதாரம் தூரநோக்கு விழிப்புணர்ச்சியை உருவாக்கியது. அத்துடன் சீன பிரயாண ஒத்த பாகத்தை எதிர்கொள்வதற்கு இலங்கை பிரயாண முகவர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்கியது. 6 இலங்கை கம்பனிகள் இந்த சந்தையில் பங்குபற்றியது.

- **பீஜிங் சர்வதேச உல்லாசப் பயணத்துறை எக்ஸ்போ (BITE) பீஜிங் 17-19 ஜூன் 2011.**

100,000 பொதுமக்கள் மற்றும் கிட்டத்தட் 40,000 வர்த்தக தொழிற்துறை சார்ந்தோரைக் கவர்ந்த சர்வதேச மாநாட்டு நிலையத்தில் BITE இடம்பெற்றது. மொத்தமாக 80க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்கள் அத்துடன் 24 சீன தேசிய மாகாணங்கள் இந்த சந்தையில் பங்குபற்றியது. 5 இலங்கை முன்னணி வாய்ந்த இலங்கை முகவர் நிலையங்களுடன், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் பங்கெடுப்புடன், பீஜிங்இலுள்ள இலங்கை தூதுவராலயத்தின் உதவியுடன், வருடத்தின் நல்லதொரு மாதத்தில், 12 குறிப்பிட்ட தொனிப் பொருளுடன் 2011 ஸ்ரீலங்கா ஆண்டு விஜயத்தின் தொனிப் பொருளை மேம்படுத்துவதற்கு இலங்கை உல்லாசப் பயண அபிவிருத்திப் பணியகம் மத்தியஸ்த மார்க்கத்தை எடுத்துள்ளது.

- **சீனா சர்வதேச டிரவல் மார்ட் (CITM) குன்மிங், 27-30 நவம்பர் 2011.**

சீன தேசிய உல்லாசப்பயண நிருவாகத்தினால் (CNTA) கூட்டாக ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு வருடாந்த நிகழ்வே CITM வர்த்தக சந்தையாகும். இது சீன பிரயாண கைத்தொழிலின் மாற்றமான துறையினரின் பரந்து பட்ட பங்கேற்புடன், சாங்ஹாய் புதிய சர்வதேச எக்ஸ்போ நிலையத்தில் நடைபெற்றது. கிட்டத்தட்ட 100,000 பிரயாணத்துறை பொதுமக்கள், 1000 வியாபார கொள்வனவாளர் மற்றம் 800 பத்திரிகையாளர்களும் இதில் கலந்து கொண்டனர். இதில் இலங்கையைச் சேர்ந்த 8 கம்பனிகள் பங்கு பற்றியது.

**ருஷ்யா**

- **ஒட் டைக் லெய்ஷர், மொஸ்கோ 21-24 வரை செப்டெம்பர் 2011.**

மொஸ்கோ லக்ஸரி லெய்ஷரில், இலங்கை ஒரு வழமையாகப் பங்குபற்றுகிற நாடாகும். இலங்கை ஆதாரம் 21,000 சதுர மீற்றர் தரைப் பிரதேசத்தைக் கொண்டிருந்தது. இலங்கை உல்லாசப் பயணத்துறையின் 09 தொனிப்பொருள் கண்ணொட்டத்தைக் கொண்டிருந்த ஆதாரத்தை அலங்கரிப்பாளர்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் 2011 செப்டம்பர் 17ம் திகதி ருஷ்யாவுக்கு நேரடியான செயற்பாட்டை ஆரம்பித்ததனால் இந்த ஆண்டு குறிப்பிடத்தக்க பங்கெடுப்பாகும். அவர்கள் இந்த ஆண்டு இலங்கைத் ஆதாரத்துடன் பங்கு பற்றியது. அத்துடன் மொத்தக் கண்காணிப்பாளர்கள் 1359 ஆகும். (647 ருஷ்ய நாடு, 712 சர்வதேசம்)

- **MITT 2011 - மொஸ்கோ - 16-19 - 2011. பிரயாணம் மற்றும் உல்லாசப் பயணத்திற்கான சர்வதேச வியாபார சந்தை.**

கடந்த 18 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளூர் உல்லாசப் பிரயாணத் துறை சந்தை மற்றம் நுகர்வாளர்களிடையே விழிப்புணர்ச்சியைக் கட்டியெழுப்புவதற்கு திறமையான வழி என்பதை MITT நிரூபித்துள்ளது. மொஸ்கோவின் மிகப்பெரிய கண்காட்சி நிலையமாகிய எக்ஸ்போ சென்டரில் எட்டு பார்வையாளர் கூடங்களை இந்த நிகழ்வு உள்ளடக்கியிருந்தது. கிட்டத்தட்ட 80,000 விருந்தினர்கள் மற்றம் 475 பத்திரிகையாளர்களையும் கொண்ட MITT என்றும் மிக சுறுசுறுப்பானதொரு நிகழ்வாகும். அத்துடன் கண்காட்சியாளர்களுக்கு உதவுவதற்கு, மிகத் திறமையாக இந்த நிகழ்வில் நேரத்தை ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. இக் கண்காட்சியில் முதலாவது தினம் ராஜதந்திரிகளுக்கும், அடுத்த இரண்டு தினங்கள் வியாபாரத் தொழிற்துறை சார்ந்தோருக்கும், இறுதித் தினம் பொதுமக்களுக்கும் திறந்திருந்தது. இலங்கையைச் சேர்ந்த 14 வியாபார கம்பனிகள் உட்பட 189 நாடுகளைச் சேர்ந்த 3000க்கும் மேற்பட்ட கம்பனிகள் MITT 2011ல் கலந்து கொண்டது.

**ஜெர்மனி.**

- **சர்வதேச டுவரிஸ்ட் போர்ஸ் (ITB) மெஸ் பெர்லின் 9-13 - மார்ச் 2011.**

உலகில் முன்னணி வாய்ந்த பிரயாண வியாபார கண்காட்சி 11,000க்கும் மேற்பட்டவர்களைக் கவர்ந்துள்ளது. இவ்வாண்டு பிரயாணக் கைத்தொழிலைச் சார்ந்த 188 நாடுகளைச் சேர்ந்த 11,163 கம்பனிகள், நவீன உற்பத்திகள் மற்றும் சேவைகளைச் சமர்ப்பித்துள்ளன. வருகை தந்தோரின் தரவுகள் மொத்தம் 170,000 வருகை தந்தோர் (2010 : 179,351) உடன் சாதகமான நிலைமையை வெளியிட்டுள்ளது. அத்துடன் வெளிநாட்டிலிருந்து 40 வீதத்திற்கும் மேற்பட்ட வியாபார விருந்தினர்கள் வருகை தந்துள்ளனர். 94 நாடுகளைச் சேர்ந்த 7000 பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர். இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை பங்குதாரர்கள், டுவர் இயக்குனர்கள் மற்றும் ஹோட்டல்களுடன் 57 இணை கண்காட்சியாளர்களுடன் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

- **CMT ஸ்டட்கார்ட் 15-23 ஜனவரி, 2011.**

(வியாபார, ஊடக மற்றும் பொதுமக்கள்) 223,000 விருந்தினர்களுடன் ஜெர்மனியில் மிகப் பெரிய நுகர்வோர் சந்தை CMT 2011 இற்கு 4 இலங்கை வியாபார கம்பனிகள் பங்குபற்றியுள்ளன.

**பிரான்ஸ்.**

- **தூர எல்லைத் தன்மை - பிரயாணம் மற்றும் உல்லாசப் பிரயாணம் தொடர்பான நுகர்வோர் சந்தை பாரிஸ் 25 –27, மார்ச் 2010.**

இயற்கை வனவிலங்கு, மற்றும் தொழில் முயற்சியை இலக்காகக் கொண்டு இலங்கையை அடையாளப்படுத்தி பிரான்ஸ் பிரயாணிகளிடையே சிறந்த சிந்தனைப் படைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இயற்கை உல்லாசப்பிரயாணத்தை மேம்படுத்துவதற்கான நுகர்வாளர் சந்தை. இலங்கையிலிருந்து 3 கம்பனிகள் பங்குபற்றியது.

- **IFTM வியாபார சந்தை - பாரிஸ், பிரான்ஸ் 20 - 23 செப்டம்பர் 2011.**

பெரிஸ், போர்ட் டி வெர்ஸைலஸ்ஸில் நடைபெற்ற IFTM 2011 பிரான்ஸ் மற்றும் சர்வதேச உல்லாசப் பயணத்துறை கைத்தொழிலின் பின்னாலுள்ள ஒரு பிரதான சந்திக்கும் இடம், சந்தை இடம் மற்றும் இயங்குகின்ற சக்தியாகும். இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை 12 வியாபாரக் கம்பனிகளுடன் இந்நிகழ்வில் பங்குபற்றியது.

**ஐக்கிய அமெரிக்கா.**

- **நிவ் யோர்க் டைம்ஸ் பிரயாணக் கண்காட்சி. 25 - 27 பெப்ரவரி 2011.**

500 கண்காட்சியாளர்களுடன் 150 நாடுகள் அத்துடன் இந்நிகழ்வில் இலங்கையைச் சேர்ந்த 2 கம்பனிகள் பங்குபற்றியது.

**ஜப்பான்.**

- **JATA உலக வர்த்தக சந்தை - டோக்கியோ - 30 செப்டெம்பர் - 02 ஒக்டோபர் 2011.**

JATA உலக வர்த்தக சந்தையில் இலங்கை வர்த்தக சந்தை மற்றும் இலங்கை மேம்பாட்டுடன் கூட்டாக மேற்கொள்ளப்பட்டது. ஜப்பான் வர்த்தக சந்தையை எதிர் கொள்வதற்கு 139 நாடுகளைச் சேர்ந்த 112,000 பேர் வருகை தந்துள்ளனர். இலங்கை பார்வையாளர் கூடத்தில் 13 பிரயாணக் கம்பனிகள் பங்குபற்றின. அத்துடன் இலங்கை உல்லாசப் பிரயாணிகள் உற்பத்தி தொடர்பாக விழிப்புணர்ச்சி உருவாக்கப்பட்டது.

**ஒஸ்ட்ரியா**

- **பெரீன் - வியன்னா, ஒஸ்ட்ரியா 13 - 16 ஜனவரி 2011.**

இரண்டாவது தடவையாக ஒஸ்ட்ரியாவிலுள்ள இலங்கை தூதுவராலயத்துடன் இணைந்து இலங்கை உல்லாசப் பயணத்துறை அபிவிருத்திப் பணியகம் மத்திய ஐரோப்பியாவில் வருடாந்தம் நடைபெறுகின்ற மிகப் பெரிய பிரயாணம் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை சந்தையாகிய (Ferrin Messe – 2011) இல் பங்கேற்றது. இச்சந்தை 150,000க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் மற்றும் 70க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 800 - 850 உல்லாசப் பிரயாண மற்றும் பிரயாணக் கம்பனிகளையும் கவர்ந்துள்ளது. இந்த ஆண்டு 4 நாள் சந்தையில் பொது மற்றும் பிரயாண வியாபாரம் ஆகிய இரண்டையும் சேர்ந்த 150,000க்கும் மேற்பட்ட இலங்கை ஆதாரத்தில் கவர்ந்துள்ளனர். இந்நிகழ்வில் 4 உள்ளூர் வியாபார கம்பனிகள் பங்குபற்றின.

**சுவீடன்.**

- **TUR – 2010 கொதென்பர்க் , 24 - 27 மார்ச் 2011.**

TUR ஸ்கெண்டிநேவியன் பிராந்தியத்தை மேம்படுத்துவதற்குரிய பிரதான சந்தையாகும். 19,000 வியாபாரப் பங்கெடுப்போருடன், 50,000 வருகை தந்தோருடன் TUR 2011 கவரப்பட்டுள்ளது. 8 உள்ளுர் கம்பனிகள் கலந்து கொண்டன.

**நெதர்லாந்து.**

- **வாகன்டிபியர்ஸ் - பிரயாண உல்லாசப் பிரயாண சந்தை - அட்ரெச்ட் நெதர்லாந்து. 11 - 16 ஜனவரி.**

இலங்கை தொடர்பாக தூர இலக்கு விழிப்புணர்ச்சி 120,000 வருகை தந்தோரிடையே உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சந்தையில், 10 இலங்கை வியாபாரக் கம்பனிகள் பங்குபற்றியது.

**ஐ. அ. ரா. (UAE)**

- **அரேபியன் டிரவல் மாட் (ATM) டுபாய் 02- 05 மே 2011மத்திய கிழக்கு**

மத்திய கிழக்கு மற்றும் நட்பு அரேபிய பிராந்தியங்களிடையே வியாபார செல்வாக்கு தடையின்றி செல்வதற்கு அரப்பணிக்கப்பட்ட இத்துறையின் முன்னணி வாய்ந்த பிரயாணம் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை கண்காட்சியே “அரேபியன் கண்காட்சி சந்தை” (ATM) ஆகும். இலங்கையில் பிரயாண மற்றும் உல்லாசப் பிரயாண கைத்தொழிலின் அங்கத்தவர்களுடன் 2003 இலிருந்து இந்நிகழ்வில் இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை பங்கு பற்றியது. அத்துடன் இந்நிகழ்வில் பங்குபற்றிய தொடர்ச்சியான 9வது ஆண்டு இதுவாகும். இவ்வியாபார சந்தையில் 33 கைத்தொழில் சங்கங்களுடன் SLTPB பங்குபற்றியது.

**இத்தாலி**

- **“Borsa Internatainale Tourisme” பிரயாணம் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை (BIT) மிலான் இத்தாலி, 17 - 20 பெப்ரவரி, 2011)**

BIT (“Borsa Internatainale Tourisme”) இத்தாலிய உல்லாசப் பிரயாண உற்பத்திகள் மற்றும்ஒரு பரவலான 120 நாடுகளுக்கு மேற்பட்ட மிகச் சிறந்த சர்வதேச வழங்கல்களின் சேகரிப்புடனான மிகப்பெரிய கண்காட்சியாகும். 108,000 வியாபாரத் தொழிற்துறை சார்ந்தோரைக் கவர்ந்துள்ள, இத்தாலியின் மிகப்பெரிய சந்தையில் இலங்கையின் 13 வியாபாரக் கம்பனிகள் பங்குபற்றியது.

**பங்களாதேஷ்**

- **பங்களாதேஷ் சர்வதேச உல்லாசப் பிரயாணத்துறை சந்தை (BITF) டாக்கா பங்களாதேஷ், 20 - 22 ஒக்டோபர் 2011.**

முதலாவது தடவையாக பங்களாதேஷ் சந்தையை மேம்படுத்துவதற்கு 5 உள்ளுர் கம்பனிகளுடன் இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை பங்குபற்றிய மிகப்பெரிய பிரதான வியாபார சந்தையே (BITF) ஆகும். BITF வருகை தந்தோர்க்கு ஒரே தடவையில் எல்லா பிரயாணம் தொடர்பான உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குகிறது. அத்துடன் இதற்கான எதிர் கொள்வதற்கு கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு அவர்களது கருமங்களை இலகுபடுத்தியது.

ஒர் இணைப்புப் பாலமாக இது அசோசியேசன் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் தனியார் துறை சார்ந்தோரையும் சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பை வழங்கியது.

**போலந்து**

- **டுவர் சலூன் - பொஸ்னான், போலந்து 19 - 22 ஒக்டோபர் 2011.**

இலங்கை முதல் தடவையாக 6 உள்ளூர் கம்பனிகளுடன் இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை டுவர் சலூன் 2011இல் பங்கு பற்றியது. இந்த சந்தை 40 நாடுகளைச் சேர்ந்த 760 கண்காட்சியாளர்களையும் 30,000 இற்கு மேற்பட்ட வருகை தருவோரையும் கவர்ந்துள்ளது. டுவர் சலூனில் இலங்கை ஆதாரம் போலந்துக்கான இலங்கை பிரதிநிதி தூதுவர் பமெலா ஜே. டீன் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

**வியாபர சந்தையின் கண்ணோட்டம் :**

- பங்களாதேஷ் சர்வதேச வியாபார சந்தையில் (BITF) 2011 "கண்காட்சியாளர் தங்கப் பரிசு" வெற்றியீட்டியது.
- WTM 2011ல் "உலகில் மிக உயர்ந்த எழுச்சி பெற்று வருகின்ற பிரயாண தொலைவு" இடையே இலங்கை நியமிக்கப்பட்டது.
- கவர்ச்சித் தன்மை, சமர்ப்பித்தல், தோற்றம் மற்றும் சேவையாற்றுகின்ற விசாரணைகட்காக ITB 2011 இல் 9வது சிறந்த ஆதரவுக்கு வெகுமதி பெற்றுக் கொள்ளப்பட்டது.
- சுறுசுறுப்பான ஒத்துழைப்புக்காக "Leisusur 2011" இல் விஷேட வெகுமதி.






# நிகழ்வுகள்

### இலங்கை விஜயம் 2011

இலங்கை விஜயம் 2011 நடவடிக்கை கீழ்க் கண்டவாறு 8 பல்வேறு உற்பத்தி வகைகளின் உல்லாசப் பிரயாண சின்னத்தை அடையாளப்படுத்தி, “பெயார் ஸ்ரீலங்கா 8 அதிசய தினங்களில், 8 அதிசய அனுபவங்கள் எனும் தொனிப் பொருளின் கீழ் எட்டு உற்பத்தி வகைகள் தொடர்பாக, இலங்கை உல்லாசப் பயணத்தை மையப்படுத்தியதாக இலங்கை விஜயம் 2011 நடவடிக்கை அமைந்திருந்தது.

| | |
|---|---|
| கடற்கரைகள் | புராதனம் |
| விளையாட்டும் தொழில் முயற்சியும் | சிலிர்ப்பு |
| பாரம்பரியப் பகுதிகள் | பாரம்பரியம் |
| சிந்தனை மற்றும் உடல் நலம் | பேரின்பம் |
| நாட்டின் நாடகப் பாணியான அழகு | நாடகமேடை |
| வனவிலங்கு மற்றம் இயற்கை | வனம் |
| மக்களும் கலாச்சாரமும். | சாரம் |
| வருடாந்த பண்டிகைகள் | பண்டிகை |

இலங்கை விஜயம் 2011 மேம்படுத்தல் நடவடிக்கை உல்லாசப்பயணக் கைத்தொழிலின் இணைப்புடன் அபிவிருத்தி செய்யப்பட்டது. யுத்த நிலைமை முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்தல் ஒரு புதிய அனுபவம் என பல உல்லாசப் பியாணிகள் கருதுகின்றனர். ஆகவே “புதியதோர் இலங்கை” 2011 விஜயம் சந்தைப்படுத்தல் நடவடிக்கை பிரதான அழுத்தத்தைக் கொண்டுள்ளது.

12 மாதங்கள் செயற்திட்டம். குழு இலக்கு - உள்ளூர் சமுதாயம், கைத்தொழில், நுகர்வாளர்கள் மற்றும் ஊடகம்.

### ஜனவரி - தொனிப் பொருள் ‘கடற்கரை’

- **கடற்கரை பாகாப்பு தினம் - 8, ஜனவரி 2011**

கடற்கரை பாதுகாப்பு தின செயற்பாடுகள் பெந்தோட்டை, களுத்துறை, நீர்கொழும்பு, வாதுவை மற்றும் அருகம்பே கடற்கரை எல்லைகளில் ஒழுங்கு செய்யப்பட்டன. பிரதான நிகழ்வு வாதுவையில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்தன அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு கடற்கரைப் பகுதி ஹோட்டல்களின் உல்லாசப் பயணிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

- **படகோட்டப் போட்டி 15 ஜனவரி 2011.**

நீர்கொழும்பு கடற்கரையில் நீர்கொழும்பு ஹோட்டல்கள் சங்கத்துடன் இணைந்து படகோட்டப் போட்டி SLTPB யினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதோடு இணைந்ததாக, அதே நாளில் நீர்கொழும்பு "கோல்டி சேண்ட்ஸ்" ஹோட்டலில் "புராதன கடல்கள்" என்ற தொனிப் பொருளில், புகைப்படக் கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது.

- **மணல் வெளி அரண்மனை போட்டி 23 ஜனவரி 2011.**

மணல் வெளி அரண்மனை மற்றும் கடல் கரப்பந்தாட்டப் போட்டித் தொடர் பெந்தோட்டைக் கடற்கரையில் நடைபெற்றது. இந்த நிகழ்வை இலங்கை ஹோட்டல்கள் சங்கத்துடன் இணைந்து (THASL) SLTPB ஒழுங்கு செய்திருந்தது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் ஆகிய இரு தரப்பினரும் இதில் கலந்து கொண்டனர்.

- **கடற்கரைகள் தொடர்பான கருத்தரங்கு 28 ஜனவரி - 2011.**

"இலங்கை விஜயம்" 1வது அறிவுத் தொடர் போன்ற செயற்திட்டம் கடற்கரைகள் தொடர்பான கருத்தரங்கு SLTPB யினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் கிடைக்கின்ற கடல்சார் வாழ்க்கை வளங்கள் தொடர்பாக உலகின் ஏனைய நாட்டு எல்லைகளுடன் ஒப்பிடுகையில் மாற்றம் மற்றும் கவர்ச்சியழகில் செழிப்பானதாகும், என ஆராய்ச்சியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந் நிகழ்வில் வெளிநாட்டு தூதுவராலயப் பிரதிநிதிகள், உல்லாசப் பிரயாண முகவர்கள், மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கடல்சார் வாழ்க்கை ஊக்குவிப்பாளர்களும்கலந்து கொண்டனர்.

**பெப்ரவரி - தொனிப்பொருள் 'விளையாட்டுக்கள் மற்றும் தொழில் முயற்சி'.**

- **சர்வதேச கோல்ப் டூர்னமன்ட் - 13 பெப்ரவரி 2011.**

சர்வதேச கோல்ப் டூர்னமன்ட், இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்தி பணியகம், விக்டோரியா கோல்ப் மற்றும் நாட்டின் கோடை வாசஸ்தலத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்வு உலகின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 100க்கு மேற்பட்ட வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்துள்ளது. இதற்கு மேலாக இந்நிகழ்வில் 25 உள்சூர் கோல்ப் விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர்.

- **ஜிபி 14 - உலக கடற்பிரயாண நிகழ்ச்சி - 25 பெப்ரவரி 2011.**

ஜிபி 14 - உலக கடற்பிரயாண போட்டித் தொடர் நீர்கொழும்பு கடற்கரையில், கடல் அலையுடன் உல்லாசப்படகுத் தொகுதி ஆரம்பிக்கப்பட்டதால், நீர்கொழும்புக் கடற்கரையில் நடைபெற்றது. பெரும்பாலும், முன்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு முன்னர் வரையறுக்கப்பட்டிருந்த (GP14) உலக கிண்ண வரலாற்றில் முதல் தடவையாக இலங்கையில் நடைபெற்றது.

- **குடியேற்ற கிரிக்கட் மற்றும் 'அங்கம்பொர' பாரம்பரியக் கலைகள் தொடர்பான கருத்தரங்கு 28 பெப்ரவரி 2011.**

குடியேற்ற கிரிக்கட் தொடர்பான கருத்தரங்கு, முன்னாள் கிரிக்கெட் வீரரும், தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாளருமான திரு. டொனி க்ரெய்க் அவர்களால், இலங்கை ஹோட்டல்

முகாமைத்துவ மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பாரம்பரிய “அங்கம்பொர” கலைகள் தொடர்பான மேலதிக நிரூபணங்கள், செல்வன் கருணபால மற்றும் அவரது குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்டது.

## மார்ச் "MICE" தொனிப்பொருள்

- **UNWTO தெற்காசியா, கிழக்கு ஆசியா, பசுபிக்கிற்கான இணை கூட்டங்கள் 24 - 26 மார்ச் 2011.**

உலக உல்லாசப் பிரயாணத்துறை ஸ்தாபனம் தெற்காசியா, கிழக்கு ஆசியா, பசுபிக் 23வது வருடாந்த மாநாட்டு உபகரணங்களுக்கான இடமாக இலங்கையைத் தேர்ந்தெடுத்தது. மாநாடு இலங்கையின் உல்லாசப் பிரயாணத் துறையின் பூரணமாக, 12 மாதத் தொனிப் பொருளுக்குப் பொருத்தமாக இருப்பதுடன், மார்ச் கூட்டத்துக்கும் மாநாடுகளுக்கும் அர்ப்பணிக்கப்பட்டது.

## ஏப்ரல் தொனிப்பொருள் ‘மக்களும் கலாசாரமும்’.

- **சிங்களப் புத்தாண்டு வைபவம் - 09 - 16 மற்றும் 26 ஏப்ரல் 2011.**

இலங்கையின் பல்வேறு பாகங்களின் கலராசாரம், சமூக சமாதானத்தை அடையாளப்படுத்துவதற்கு கண்டி, திருகோணமலை மற்றும் பெந்தோட்டையிலும் இலங்கை உல்லாசப் பயண அபிவிருத்திப் பணியகம் மற்றும் அத்துடன் உல்லாசப் பிரயாண பங்குதாரர்களும் விஷேட பண்டிகை செயற்திட்டங்களை ஒழுங்கு செய்திருந்தன. அத்துடன் அவர்களது சொந்த ஒத்த தன்மை கலாச்சாரங்களுக்கு கண்ணோட்டத்தை செலுத்துவதற்குரிய வாய்ப்பினையும் வழங்கியது.

## மே தொனிப்பொருள் ‘பாரம்பரியம்’

- இந்தத் தினங்களில் நாட்டில் பல்வேறு அரசாங்க மற்றும் அரசல்லாத ஸ்தாபனங்களின் கூட்டாக பரந்தளவில் 2600 ஸ்ரீ சம்பத்தத்வ ஜெயந்தி கொண்டாட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டன.

## ஜூ ன் தொனிப்பொருள் ‘திருமணங்களும் தேன்நிலவும்’

- ஜூன் மாதத்தில் 5 வெளிநாட்டுத் திருமணங்கள் பெந்தோட்டைக் கடற்கரை, வாதுவை, கல்கிசையிலும் நடத்தப்பட்டன.

## ஜூ லை தொனிப்பொருள் ‘உள்ளம் மற்றும் உடல் நலம்’

- வெளிநாட்டு மற்றும் உள்ளூர் வாடிக்கையாளர்களுடன் பரஸ்பர உணர்வை ஏற்படுத்துவதற்கான போதிய வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், மேலான அடையாள கருத்துருவுடன், ஆயர்வேத உற்பத்தி மற்றும் சேவைகளுக்குப் பிரசித்தம் செய்தல் போன்ற ஆகக் கூடிய வெளிப்பாட்டுக்காக இந்தக் கண்காட்சி BMICH இல் நடத்தப் பட்டது.

## ஆகஸ்ட் தொனிப்பொருள் ‘பண்டிகைகள்’.

- கண்டி எசல பெரஹரவில் ஊடக நிகழ்ச்சி விவர அறிக்கை வழங்கல் 6 - 13 ஆகஸ்ட் 2011.

## செப்டெம்பர் தொனிப்பொருள் ‘வனம்’

- “வனம்” தொனிப்பொருளைக் கொண்டாடுவதற்குகொழும்பில் செப்டெம்பர் மாதத்திற்கு ஒழுங்கு செய்யப்பட்ட பிரதான செயற்பாடாக வனவிலங்கு கையேடு ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.






## விஷேட நிகழ்வுகள்.

- இலங்கைக்கான 1வது உல்லாசப் பிரயாணியை வரவேற்றல் 2011 - ஜனவரி 01ம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில்.

- 750,000 மற்றும் 800,000 இலங்கை உல்லாசப் பிரயாணிகளை வரவேற்றல்.

- சூடான காற்று பலூன் பண்டிகை. 19 மார்ச் - 2 ஏப்ரல் - 2011 பிரதான நிகழ்ச்சி சுதந்திர சதுக்கத்தில். (10 வெளிநாட்டு பங்கேற்பாளர்கள்)

- விஷேட போதி பூஜை - 11 ஜுன் 2011 களனி விஹாரையில்.
சுனாமியின் போது பாதிக்கப்பட்ட ஜப்பானியர்களுக்கு புண்ணியம் வழங்குவதற்வதற்கு.

- “சந்தைப்படுத்தல் ஆசான்” பேராசிரியர் பிலிப் கொட்லரின் வருகை. 05 - ஜுன் 2011. Waters edge இல் 1000க்கு மேற்பட்ட பார்வையாளர்கள் சாந்தி பெறுவதற்காக விஷேட கருத்தரங்கு.

## உள்ளூர் நிகழ்வுகள்.

- காலி இலக்கிய பண்டிகை - ஜனவரி 2011.
  2011, காலி இலக்கிய பண்டிகையை SLTPB ஏற்பாடு செய்திருந்தது. இது சர்வதேச எழுத்தாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்புடன் நடைபெற்ற ஒரு சர்வதேச நிகழ்வாகும்.

- தேசத்திற்கு மகுடம். - பெப்ரவரி - 2011.
  தேசத்திற்கு மகுடம் - நாட்டின் சுதந்திர தின பண்டிகை தின நிகழ்ச்சிக்கு இணைவாக நடைபெற்ற ஒரு கல்வி மற்றும் அபிவிருத்தி கண்காட்சியாகும். 2011 பெப்ரவரி 04ம் திகதி சதந்திர தின கொண்டாட்ட சமயத்தில் மொனராகலை மாவட்டத்திலுள்ள புத்தல பிரதேசத்தில் நடைபெற்றது.

- **உலக உல்லாசப் பிரயாண தினம் - 27 - செப்டெம்பர் 2011.**
  பிரயாண மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை கைத்தொழில் தொடர்பாக சகல பங்குதாரர்களின் பங்கேற்புடன் கொழும்பில் நடைபெற்ற விஷேட வைபவத்தில் உலக உல்லாசப் பிரயாண தினம் பாரிய வடிவில் கொண்டாடப்பட்டது. பிரதான நிகழ்ச்சி முன்னணி வாய்ந்த பொது மற்றும் தனியார் துறை பிரயாண தலைவர்களுடன் பிரதான வைபவத்தில் 2000 பாடசாலை சிறுவர்களின் பங்கேற்புடன் “சுவனத்திற்கான வீதி” என்றழைக்கப்பட்ட, ஏரிக்கரை அருகாமையிலுள்ள உல்லாசப் பிரயாண வலயத்தில் இடம் பெற்றது.


  புராதனம், பாரம்பரியம், பேரானந்தம், வனம், வசீகரம், ஊக்கம், பண்டிகை, சாரம், நாடக பாணி உட்பட இலங்கை உல்லாசப் பிரயாணத்துறையின் இந்த ஆண்டு மேம்பாட்டு தொனிப்பொருட்களை உள்ளடக்கியதாக வைபவத்தில் பத்து புதிய முத்திரைகள் வெளியிடப்பட்டன.

- **அருகம்பே Pro – surf – 30 ஆகஸ்ட் - 4 செப்டெம்பர் - 2011.**
  **Pro – surf** என்றால் கடந்த 6 அண்டுகளாக ஸ்ரீலங்கா எயார் லைன்ஸினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஒரு நிகழ்ச்சியாகும். உல்லாசப் பிரயாணியின் ஓர் எல்லையாக அருகம்பேயின் சாதகமான கருத்துருவை உயர்த்துவதற்கு சர்வதேச பங்குதாரர்களுடன் தாமாகவே உருவாக்கிய பங்குடமைகள் உறுதியாகக் கட்டியெழுப்புவதற்கு உலகின் சிறந்த பத்து ஜலக்கிரீடை விளையாட்டு முனைகளில் ஒன்றாகிய அருகம்பேயைப் மேம்படுத்துவதற்கு மிகச் சில 6 நட்சத்திர பிரதான நிகழ்வுகளில் ஒன்றாக இருக்கிறது.

- **மட்டக்களப்பு சர்வதேச வியாபார சந்தை. (BITF), 7 - 9 ஒக்டோபர் - 2011.**

  நாட்டில் கிடைக்கின்ற உல்லாசப் பயணத்துறை கவர்ச்சிகளை காண்பிக்கக் கூடிய வகையில் உல்லாசப் பிரயாணத் துறைக்கான சிறந்த முக்கியத்துவத்தையும் இத்துறையில் கிடைக்கின்ற முதலீட்டு வாய்ப்புக்களையும் கருத்திற் கொண்டு

மட்டக்களப்பிலுள்ள வெபர் ஸ்டேடியத்தில் மட்டக்களப்பு மாவட்ட வணிகக்கழகம், கைத்தொழில் மற்றும் வியசாயத்துறை கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த BITF இல் SLTPB பங்கு பற்றியது.








- **இலங்கைக்கான உக்ரைன் விமானம் அங்குரார்ப்பணம். 23 - ஒக்டோபர் - 2011.**
  உக்ரைனிலிருந்து வருகை தந்த "Aero Svit" விமான அங்குரார்ப்பண வரவேற்புக்கு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் "Water cannon" ஓட்டத்துறை பிரதேசத்தில் வரவேற்பு நடன வைபவத்தை இலங்கை உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி பணியகம் ஏற்பாடு செய்திருந்தது.

- **வாசனைத் திரவியங்கள் பண்டிகை. 28 - 30 ஒக்டோபர் - 2011.**
  நண்பர்கள் மற்றும் குடும்பங்களுடன் சர்வதேச தொனிப்பொருள் தனிவகை சமையல் உணவு விற்பனை நிலையங்கள் ஊடாக இலகுவாக சென்றடைந்து மகிழ்ச்சியுடன் சுற்றிப் பார்க்கும் வசதியுடன் இந்நிகழ்வில் உணவுப் பிரியர்களை அனுமதித்து அவர்கள் பங்கெடுப்பதற்கு கிரீன் பாத்தில் "உலக வாசனைத் திரவியங்கள் உணவுப் பண்டிகை" நடைபெற்றது. நேரடி இசையுடன் பண்டிகை காற்று, சமையல் செய்முறைகள் மற்றும் விஷேட கலாச்சார செயற்பாடுகள் வருகை தந்த சகலருக்கும் ஓர் உண்மையான மறக்க முடியாத உணவருந்தும் அனுபவத்தை வழங்கியது.

- **கண்டி விஜயம் 2011. - 10 - 13 - நவம்பர் 2011.**
  நிறுவனங்களுக்கு புதிய பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கி உள்ளூர் சமுதாயம் மற்றும் வருகை தந்தோர்களின் சமூக வாழ்விற்கு ஒரு புதிய திசையை கொண்டு வரக் கூடிய வகையிலும் இலங்கை உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி பணியகத்துடன் இணைந்து மத்திய மாகாணத்தில் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி முகவர் நிலையம் (REDA) மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சினாலும் "கண்டி விஜயம்" என்ற பெயர் கொண்ட உல்லாசப் பயணத் துறை மற்றும் வர்த்தகக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

- **இலங்கை வடிவமைப்பு பண்டிகை - 16 - 20 நவம்பர் - 2011.**
  இலங்கை வடிவமைப்பு பண்டிகை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் SLTPBஉடன் பங்குடமையில் வடிவமைப்பு கல்வி நிலையத்தால் (AOD) ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இலங்கை ஹோட்டல் கைத்தொழில் மற்றம் நாடு பூராவிலுமுள்ள கைப்பணி மற்றும் கைவினைஞர் சமுதாயங்களுக்கிடையில் உள்ளூர் விநியோகத்தினரின் உயர் ரக உற்பத்திகளை இலங்கை ஹோட்டல் கைத்தொழில் அவற்றை

பயன்படுத்துவதை அனுமதித்து சமகால உற்பத்திகள் மற்றும் துணையுறுப்புக்கள் பயன்பாட்டை வளர்ப்பதற்கு அவர்களை ஊக்கப்படுத்தி புதிய சந்தை இணைப்புக்களை இனம் கண்டு உருவாக்கும் நோக்குடனே இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

- **மிஹிபுர அபிமானி - 2011. - 14-18 டிசம்பர் 2011.**
  உள்ளூர் உல்லாசப் பிரயாணிகளிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்கும் வகையில் மிஹிரிகமையில், “மிஹிபுர அபிமானி” வர்த்தக மற்றும் கல்விக் கண்காட்சியில் இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகம் பங்குபற்றியது.






## விளம்பரம் மற்றும் உற்பத்தி.

### விளம்பரம் நாட்காட்டி மற்றும் விளம்பரப் பலகை நிகழ்ச்சி.

ஆண்டு 2011 “இலங்கை விஜயம் - 2011” எனப் பெயரிடப்படுகின்றது. 12 மாதங்கள் 12 தொனிப் பொருட்களை மேம்படுத்துவதற்காக பிரிக்கப்பட்டிருந்தன. உலகளாவிய வகையில் இலங்கையை மேம்படுத்துவதே இதன் அவசியமாகும். இந்த மாதத்தில் நிகழ்கின்ற நிகழ்ச்சி தொடர்பாக இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை தலைமையக அலுவலகம் முன்னால் விளம்பரப் பலகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலும் ஆர்வமுள்ள தரப்பினர்களிடையே விழப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக இதனைக் குறிப்பிட்டு ஒரு நிகழ்ச்சி நிரல் கலண்டர் “டிரவல் லங்கா” சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது.

### ‘வாருங்கள் என்னிடம் விஜயம் செய்யுங்கள்’ நடவடிக்கை - இலங்கைக்கான மேம்பாட்டு முயற்சி.

நாட்டை காரியசித்தியுடன் இணைந்து செயல்படுவதற்கு இலங்கை மக்களை ஊக்குவிக்கும் நடவடிக்கையாகும். “எதிர்கொள்கின்ற இடம்” ஆகத் திகழ்கின்ற டிஜிட்டல் சார்ந்த இணையத்தின் இணைப்பை மையப்படுத்திய முக்கியமானதொன்றே, இந்நடவடிக்கையாகும். அத்துடன் இலங்கை உல்லாசப் பிரயாண இணையத் தளத்துக்கு வருகை தருகின்ற விருந்தினர்களை பணிப்புரை செய்வதனை மையப்படுத்தியே மேம்பாடுகள் நடைபெற்றன.

### BBC, WSJ மற்றும் Lonely Planet ஊடாக இலங்கை உல்லாசப் பயணத்துறை டிஜிட்டல் சார்ந்த விளம்பர முயற்சி 2011.

யு.கே, ஜெர்மனி, பிரான்ஸ் இந்தியா, மத்திய கிழக்கு, ருஷ்யா, கிழக்கு ஐரோப்பா மற்றும் எழுச்சியுற்று வருகின்ற ஆசிய சந்தைகள் போன்ற பிரயாணிகள் சந்தைகளில், சந்தை

“பிராண்ட்”, உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு Triad மூலம் விளம்பரங்களை (மின்னியல் பதாகைகள்) வைப்பதன் மூலம் World Street Journal. com, BBC.com மற்றும் Lonely Planet.com போன்ற மூன்று பாரிய இணையப்பகுதிகளில் டிஜிட்டல் சார்ந்த நடவடிக்கை வடிவமைக்கப்பட்டது.

**விளம்பரத் தட்டியில் காண்பிக்கப்படவுள்ள 5 நிமிட வீடியோ மற்றும் ஏனைய நிகழ்வுகள்.**
இலங்கை வழங்கவுள்ள (புராதனம், சிலிர்ப்பு, பாரம்பரியம், பேரின்பம், நாடக மேடை, வனம், சாரம், பண்டிகை) போன்ற 8 அனுபவங்களை விட சில பட்டியலிடப்பட்ட பல்வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகளைக் குறிப்பிடுகின்ற 5 நிமிடங்களுக்குள்ளான வீடியோவை இலங்கை உல்லாசப் பிரயாண அபிவிருத்தி பணியகம் அபிவிருத்தி செய்துள்ளது.

**உள்ளூர் மற்றும் சர்வதேச விளம்பரங்கள்.**
எக்ஸ்ப்ளோர் ஸ்ரீ லங்கா மற்றும் ட்ரவல் லங்காவில் விளம்பரப்படுத்தல் TTG Mena லக்ஷரி, Lonely Planet, மற்றும் Big Issue போன்ற சர்வதேச பிரயாணம் மற்றும் உல்லாசப் பிரயாணம் தொடர்பான சஞ்சிகைகளில் விளம்பரப்படுத்தல்.

இலங்கைக்கு 750,000 மற்றும் 800,000 உல்லாசப் பிரயாணிகள் வருகையைக் குறிக்குமுகமாகப் புதினப்பத்திரிகை விளம்பரம்.











**இணையம் புதுமையை நோக்கி -**

www.srilanka.travel புதிய உற்பத்தி தொனிப் பொருட்கள் உட்பட இணையம் புதிய விடயங்களைக் காண்பிக்கின்றது.




## உற்பத்தி

8 தொனிப்பொருட்கள், சுவரொட்டிகள் மற்றும் சீ.டி மீதான பல்வேறு மொழிகளில் கையேடுகள் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இவை வெளிநாட்டு பிரயாண சந்தைகள், இலங்கையில் நடைபெற்ற மாநாடுகள், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூது கோஷ்டிகள் மற்றும் - ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் அலுவலகங்கள் ஊடாகவும் விநியோகிக்கப் பட்டன.




UNWTO பொது அசெம்பிளித் தொடரில் தெற்கு ஆசியாவைச் சேர்ந்த மிகச் சிறந்த இரண்டு சிறுத்தைப் புலிகளைக் குறிப்பிடுகின்ற "வனம்" தலைப்பு கொண்ட, இலங்கை உல்லாசப் பிரயாணத் துறையின் இலக்கை மேம்படுத்துகின்ற சுவரொட்டி, "பிரெஸ்டீஜஸ்" வெட்டர் கயுஸ்டி (Prestgious Vettor Giusti Award) பரிசைத் வெற்றி கொண்டது.



## பொதுசனத் தொடர்பு.

### வருகைத் தருகின்ற பத்திரிகையாளர்கள் செயற்திட்டம் 2011.

வருகைத் தருகின்ற பத்திரிகையாளர்கள் செயற்திட்டம் 2011, தேசத்திற்கான குறிப்பிடத்தக்க ரூபா, 500.9 மில்லியன் பெறுமதி கொண்ட பிரசித்தம் பெற்ற பிரதான சந்தைகளைச் சேர்ந்த செல்வாக்கு பெற்ற அச்சிடல் மற்றும் ஊடக ஆளனியினர் 196 பேரைக் கவர்ந்து வெற்றி பெற்றுள்ளது.

| நாடு | பத்திரகையாளர் எண்ணிக்கை | புகழ் பெற்ற வருகையாளர்கள் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ஜப்பான் | 12 | பங்களாதேஷ் | அலங்காரஷ வடிவமைப்பாளர் | 1 |
| யு. கே | 6 | இந்தியா | கொன்டி காஸ்ட் - இந்தியா | 1 |
| பிலிப்பைன் | 9 | இந்தியா – மனிஷா கொய்ராலா | இந்திய பட நடிகை | 1 |
| யூ. எஸ். ஏ | 7 | தாய்லாந்து | தாய்லாந்து இளவரசி | 1 |
| பெல்ஜியம் | 2 | நேபாளம் | பட நடிகை | 1 |
| குரோஷியா | 3 | மியன்மார் | பட நடிகை | 4 |
| இத்தாலி | 18 | பூட்டான் | பட நடிகை | 3 |
| கொரியா | 1 | இந்தியா – ஸோனாக்ஷி சிங் | பொலிவூட் நடிகை | 1 |
| பங்களாதேஷ் | 4 | | | |
| ஸ்பெய்ன் | 5 | | | |
| கனடா | 21 | | | |
| சிங்கப்பூர் | 12 | | | |
| ஹொங்கொங் | 2 | | | |
| அவுஸ்திரேலியா | 4 | | | |
| பிரான்ஸ் | 4 | | | |
| நெதர்லாந்து | 2 | | | |
| சுவீடன் | 2 | | | |
| இந்தோனேஷியா | 1 | | | |
| மலேசியா | 3 | | | |
| தாய்லாந்து | 1 | | | |
| கே. எஸ். ஏ | 1 | | | |
| ஐக்கிய அரபு எமிரேட் | 1 | | | |
| குவைத் | 4 | | | |
| டென்மார்க் | 1 | | | |
| ஒஸ்ட்ரியா | 3 | | | |
| உக்ரைன் | 8 | | | |
| ஜெர்மனி | 5 | | | |
| ருஷ்யா | 11 | | | |
| இந்தியா | 16 | | | |
| சீனா | 14 | | | |
| **மொத்தம்** | **183** | | | **13** |









- "உலகின் மிகச்சிறந்த தூர எல்லைகள் 2012" இற்கிடையே இலங்கை பெயர் கொண்ட தேசிய புவியியல் பிரயாண சஞ்சிகை.
- 2012ல் பிரயாணம் செய்வதற்கு உலகின் மிகச்சிறந் ஐந்து எல்லைகளிடையே இலங்கை பெயர் கொண்ட 'கொன்டி நாஸ்ட் டிராவலர்.

**VJP டுவர்ஸிலிருந்து பெற்றுக் கொண்ட ஊடகப் பெறுமதி - ஆண்டு 2011**

| ஊடக நிறுவனம் | நாடு | மின்னியல் / அச்சிடல் | ஊடக பெறுமதி | பிரசித்த கால எல்லை | ஊடக பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| BE- PAL சஞ்சிகை | ஜப்பான் | அச்சிடல் | JPY 9,000,000 | மே 2011 | 12,856,500 |
| BBC | UK | மின்னியல் | GBP 360,000 | ஆகஸ்ட் 2011 | 63,000,000 |
| மனிலா டைம்ஸ் | பிலிப்பைன்ஸ் | அச்சிடல் | US$ 14,310 | 01 ஏப்ரல் 2011 | 1,574,100 |
| ட்ராவலர் லைப் சஞ்சிகை | பிலிப்பைன்ஸ் | அச்சிடல் | US$ 10,200 | ஜுன் - ஜுலை 2011 | 1,122,000 |
| The Replenisher | USA | அச்சிடல் | US$ 20,000 | 31 – மார்ச் 2011 | 2,200,000 |
| DER ஸ்டாண்டர்ட் ரொண்டோ | ஜெர்மனி | அச்சிடல் | Euro 29,880 | 13 மே 2011 | 4,601,520 |
| Om சஞ்சிகை | UK | அச்சிடல் | GBP 9,000 | ஜுலை 2011 | 1,575,000 |
| Qui டுவரிங் சஞ்சிகை | இத்தாலி | அச்சிடல் | Euro 548,437.5 | செப்டெம்பர் 2011 | 84,459,375 |
| CREA ட்ராவலர்ஸ் | ஜப்பான் | அச்சிடல் | JRY 35,100,000 | செப்டெம்பர் 2011 | 50,140,350 |
| அவுட்லுக் டராவலர்ஸ் | இந்தியா | அச்சிடல் | INR 6,187,500 | செப்டெம்பர் 2011 | 14,726,250 |
| வெல்த் டீவி | USA | மின்னியல் | US$ 100,000 | நவம்பர் 2011 | 11,000,000 |
| டொஹிக் டீவி | உக்ரைன் | மின்னியல் | US$ 95,814 | மே, ஜுன், 2011 | 10,539,540 |
| HTV | குரோஷியா | மின்னியல் | HRK 1,194,300 | | 25,772,994 |
| மார்க்கோ போலோ டீவி | இத்தாலி | மின்னியல் | US$ 183,600 | ஒக்டோபர் 2011 | 20,196,000 |
| பனோரமா ட்ராவல் | இத்தாலி | அச்சிடல் | US$ 215,000 | ஜனவரி 2012 | 23,650,000 |
| மார்க்கோ போலோ சஞ்சிகை | இத்தாலி | அச்சிடல் | US$ 26,600 | பெப்ரவரி 2012 | 2,926,000 |
| மாக்ஸ் சஞ்சிகை | இத்தாலி | அச்சிடல் | US$ 10,000 | ஜுலை 2011 | 1,100,000 |
| Latitudes. life.com | இத்தாலி | மின்னியல் | US$ 120,000 | ஒக்டோபர் 2011 | 13,200,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐலன்ட்ஸ் சஞ்சிகை | அவுஸ்திரேலியா | அச்சிடல் | US$ 238,230 | மார்ச் 2012 | 26,205,000 |
| Tentoumushi சஞ்சிகை | ஜப்பான் | அச்சிடல் | JPY 31,500,000 | பெப்ரவரி 2012 | 44,997,750 |
| Quit Dipolamcy | UAE | அச்சிடல் | US$ 4,5000 | நவம்பர் 2011 | 495,000 |
| ஈஸ்ட் வீக் சஞ்சிகை | ஹொங் கொங் | அச்சிடல் | US$ 675,000 | 07 செப்டெம்பர் 2011 | 74,250,000 |
| கல்ப் டிராவலர் | குவைத் | அச்சிடல் | US$ 52,500 | மே / ஜுன் 2012 | 5,775,000 |
| L' official | இந்தியா | அச்சிடல் | INR 1,936,000 | ஜனவரி 2012 | 4,607,680 |
| **மொத்தம்** | | | | | **500,970,359,00** |

**வருகை தந்த பத்திரிகையாளர்கள் செயற்திட்டத்திற்காக பெற்றுக் கொண்ட பிரசித்தம் Vs செலவு தொகை.**




## மனிதவளம், நிர்வாகம் மற்றும் நிதி,

| **ஊழியர் குழாம்** | **ஊழியர்களின்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 2010 ஜனவரி 01ம் திகதியன்று | 36 | |
| கூட்டு : புதிய ஆட் சேர்ப்பு | 18 | 54 |
| கழி : ஓய்வு பெற்றோர், பதவி விலகியோர் | 05 | |
| 2010 டிசம்பர் முடிவன்றுள்ளவாறு | 49 | |

### SLTPB அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலை பிரிவு, சம்பள விகிதம், வெற்றிடங்கள்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்று நிருபம் 30 இற்கமைய, SLTPBயின் உத்தியோகத்தர் குழாம் அங்கீகரிக்கப்பட்ட புதிய தொழில் நிலை பிரிவிற்கு உட்கிரகிக்கப்பட்டுள்ளதுடன் MSD சுற்று நிருபம் இல : 30 (1) இற்கமைய புதிய சம்பள அமைப்பு அமுல் படுத்தப்பட்டுள்ளது. வெற்றிடங்களை நிறப்புவதற்கு SLTPB புதினப்பத்திரிகை விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்துள்ளது. அத்துடன் 2010 செப்டெம்பர் மாதத்தில் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டு அதன் பின்னர், அவ்வாறே 2010 டிசம்பரில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.

## 2011 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நிதி நிலைமை தெடர்பான கூற்று.

| | குறிப்பு | 2011<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 3 | 819,853,581.02 | 177,457,518.50 |
| பெற வேண்டியவை | 4 | 340,609,153.97 | 370,394,051.10 |
| முற்பணங்கள் | 5 | 3,403,093.20 | 2,208,170.42 |
| முன் கொடுப்பனவுகள் | 6 | 231,123.85 | 1,540,259.37 |
| கடன்பட்டோர் | 7 | 34,067,741.85 | 33,151,568.90 |
| பொருட்பட்டியல்கள் | | 6,996,488.20 | 3,524,419.21 |
| | | 1,205,161,182.09 | 588,095,987.50 |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்.** | | | |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 8 | 15,485,923.32 | 18,051,625.75 |
| | | 15,485,923.32 | 18,051,625.75 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,220,647,105.41** | **606,147,613.25** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்.** | | | |
| முற்பணத்தில் வருமானம் | 9 | 5,585,302.75 | 7,417,059.71 |
| செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 10 | 552,667.74 | 978,067.08 |
| ஊழியர் நலனோம்பல்கள் | 11 | 5,996,352.63 | 5,004,637.50 |
| திரட்டிய செலவினங்கள் | | 223,272,965.65 | 38,867,992.79 |
| கடன் கொடுத்தோர் | 12 | 25,388,355.74 | 185,773,300.00 |
| | | **260,795,644.51** | **238,041,057.08** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| நீண்ட தவணை கடன் பெறுகைகள் | | | 666,666,666.68 |
| | | | 666,666,666.68 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **260,795,644.51** | **304,707,723.76** |
| **தேறிய சொத்துக்கள்** | | **959,851,460.90** | **301,439,889.49** |
| **தேறிய சொத்துக்கள் / சம நிலை** | | | |
| மூலதன பங்களிப்பு | | 33,069,156.52 | 33,069,156.52 |
| திரட்டிய மேலதிகங்கள் / பற்றாக்குறை | | 926,782,304.38 | 268,370,732.97 |
| **மொத்த தேறிய சொத்துக்கள் / சம நிலை** | | **959,851,460.90** | **301,439,889.49** |

எச். சி. ஜே குணவர்தன
உதவிப் பணிப்பாளர் - நிதி
இலங்கை உலலாசப் பயணத்துறை
அபிவிருத்திப் பணியகம் .

கலாநிதி. நாலக்க கொடஹேவா
தலைவர்
இலங்கை உலலாசப் பிரயாளத்தறை
அபிவிருத்திப் பணியகம்.

**இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.**

**2011 டிசம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று.**

| வருமானம் | குறிப்பு | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|
| கப்பலில் ஏற்றும் வரி | | 729,174,937.13 | 671,396,446.08 |
| உல்லாசப் பிரயாண அபிவிருத்தி வரி | | 454,839,489.53 | 359,274,986.21 |
| ஏனைய வருமானம் | 13 | 64,244,678.25 | 79,459,590.72 |
| **மொத்த வருமானம்** | | **1,248,259,104.91** | **1,110,131,023.01** |
| **செலவினங்கள்** | | | |
| கூலி, சம்பளங்கள், ஊழியர் நலன்கள் | 14 | 26,121,005.89 | 22,421,278.46 |
| விநியோகங்கள் பாவிக்கப்பட்ட நுகர்வுப் பொருட்கள் | 15 | 31,537,697.61 | 34,704,463.45 |
| வியாபாரம் தொடர்பான செலவு - வெளிநாடு | 16 | 30,805,777.48 | 29,910,841.62 |
| வியாபாரம் தொடர்பான செலவு – உள்ளூர் | 17 | 477,546,792.44 | 949,770,040.43 |
| பெறுமானத்தேய்வு மற்றும் தள்ளுபடி செலவுகள் | | 3,978,586.48 | 6,207,438.03 |
| ஏனைய செலவினங்கள் | 18 | 14,612,648.09 | 47,618,967.21 |
| நிதிச் செலவுகள் | 19 | 5,245,025.51 | 7,217,523.64 |
| **மொத்த செலவினங்கள்** | | **589,847,533.50** | **1,097,850,552.84** |
| இக்காலப் பகுதியின் மேலதிகம் / (பற்றாக்குறை) | | 658,411,571.41 | 12,280,470.17 |
| முன் கொண்டு செல்லப்பட்ட மேலதிகம் / (பற்றாக்குறை) | | 268,370,732.97 | 256,090,262.80 |
| **முன் கொண்டு வரப்பட்ட மேலதிகம் / (பற்றாக்குறை)** | | **926,782,304.38** | **268,370,732.97** |

**இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.**

**2011 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் / சமநிலைப்பாடு கூற்றுக்கள்.**

| | பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் ரூபா | திட்டிய மேலதிகங்கள் / (பற்றாக்குறை) ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|
| 2010 ஜனவரி 01ம் திகதியன்று மிகுதி | 33,069,156.52 | 256,090,262.80 | 289,159,419.32 |
| இக்காலப்பகுதிக்கான மேலதிகம் / (பற்றாக்குறை) | | 14,620,733.55 | 14,620,733.55 |
| மீள்கூற்று | | (2,340,263.38) | 2,340,263.38 |
| 2010 டிசம்பர் 31ம் திகதியன்று மீளக்கூறப்பட்ட மிகுதி | 33,069,156.52 | 268,370,732.97 | 301,439,889.49 |
| இக்காலப்பகுதிக்கான மேலதிகம் / (பற்றாக்குறை) | | 658,411,571.41 | 658,411,571.41 |
| 2011 டிசம்பர் 31ம் திகதியன்று மிகுதி | 33,069,156.52 | 926,782,304.38 | 959,851,460.90 |

**இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.**

**2011 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான நிதி ஓட்டக் கூற்று.**

| **செயற்பாட்டுக் கருமங்களிலிருந்து நிதி ஓட்டம்** | **2011 ரூபா** |
|---|---|
| **மேலதிகம் / (பற்றாக்குறை)** | 658,411,571.41 |
| காசு அல்லாத அசைவுகள் பெறுமானத்தேய்வு | 3,978,586.48 |
| ஊழியர் குழாம் கடனிலிருந்து வட்டி | (68,503.38) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 991,715.13 |
| நாணய மாற்று இலாப / நட்டம் | 42,924.00 |
| நட்டங்களும் தள்ளுபடி செய்தவைகளும் | 108,737.97 |
| பெறவேண்டியவைகளில் (அதிகரிப்பு) / குறைப்பு | 29,784,897.13 |
| முற்பணங்களில் (அதிகரிப்பு) / குறைப்பு | (1,374,922.78) |
| முன்கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு) / குறைப்பு | 1,309,135.52 |
| கடன்பட்டோர்களின் (அதிகரிப்பு) / குறைப்பு | (916,172.95) |
| பொருட்பட்டியலில் (அதிகரிப்பு) / குறைப்பு | (3,472,068.99) |
| முற்பண வருமானத்தில் அதிகரிப்பு / (குறைப்பு) | (1,831,756.96) |
| செலுத்தவேண்டிய வைப்பில் அதிகரிப்பு / (குறைப்பு) | (425,399.34) |
| திரட்டிய செலவினங்களில் அதிகரிப்பு / (குறைப்பு) | 184,404,972.86 |
| கடன் கொடுத்தோரில் அதிகரிப்பு / (குறைப்பு) | (160,384,944.26) |
| ஊழியர்குழாம் கடனிலிருந்து வட்டி | 68,503.38 |
| **செயற்பாட்டுக் கருமங்களிலிருந்து தேறிய நிதி ஓட்டம்** | **710,616,511.20** |
| | |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து நிதி ஓட்டம்** | |
| சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (1,553,782.00) |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய நிதி ஓட்டம்** | **(1,553,782.00)** |
| | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து நிதி ஒட்டம்.** | |
| செலுத்தித் தீர்த்த கடன் பெறுகைகள் | (66,666,666.68) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறிய நிதி ஒட்டம்.** | **(66,666,666.68)** |
| | |
| **காசு, காசுக்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / குறைப்பு** | **642,396,062.52** |
| **இக்காலப்பகுதி ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | **177,457,518.50** |
| **இக்காலப்பகுதி முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | **819,853,581.02** |

**இலங்கை உல்லாசப்பயணததுறை அபிவிருத்திப் பணியகம்.**

**31.12.2011 முடிவடைந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு எதிரிடையான சரியான வருமானம் மற்றும் செலவுக் கூற்று.**

| கணக்கு குறியீடு | விபரம் | 2011 | | |
|---|---|---|---|---|
| | **வருமானம்** | **சரியான ரூபா** | **வரவு செலவு ரூபா** | **மாற்றம் ரூபா** |
| | | | | |
| 6000 | உல்லாசப் பிரயாண அபிவிருத்தி வரி | 454,839,490 | 437,520,000 | 3.96 |
| 6001 | கப்பலில் ஏற்றும் வரி | 729,174,937 | 814,800,000 | (10.51) |
| 6100 | வியாபாரப் பங்களிப்பு மற்றும் எனைய வருமானம் | 64,244,678 | 90,000,000 | (28.62) |
| | **மொத்த வருமானம்** | **1,248,259,104** | **1,342,320,000** | **(7.01)** |
| | | | | |
| | | | | |
| | **செலவினம்** | | | |
| | 1.0 சந்தைப் படுத்தல் தொலைத்தொடர்பு | **129,260,796** | **407,872,000** | 68.31 |
| 7534 | 1.1 ஊடகம் | | | |
| 7534.A | அ. உள்ளூர் | 6,100,226 | 4,900,000 | -24.49 |
| 7534.B | ஆ. சர்வதேச | 196,999 | 13,000,000 | 98.48 |
| 7534.C | இ. VJP மற்றும் வர்த்தக FAM டுவர்ஸ் | 22,921,596 | 20,000,000 | -14.61 |
| 7534.D | ஈ. வைத்திருப்பவர் கட்டணம் | | 70,000,000 | 100.00 |
| 7534.E | உ. பிரசித்தப் படுத்தும் நடவடிக்கை | 3,995,909 | 5,100,000 | 21.65 |
| **7521** | 1.2 விளம்பரப்படுத்தல். | | | |
| 7521 C | அ. முகாமைத்துவ கட்டணம் மற்றும் கலை வேலைப்பாடு | 5,464,671 | 40,000,000 | 86.34 |
| 7521 A | ஆ. ஊடகக் கொள்வனவு மற்றும் விழிப்புணர்வு | 48,246,816 | 126,750,000 | 61.94 |
| **7532** | 1.3 வடிவமைப்பு பொருட்களின் உற்பத்தி | 41,092,396 | 89,665,000 | 54.17 |
| **7650** | 1.4 இணையம் மற்றும் நோடி சந்தைப்படுத்தல். | 1,242,182 | 38,457,000 | 96.77 |

**இலங்கை உல்லாசப்பயணததுறை அபிவிருத்திப் பணியகம்.**

**31 /12/2011 முடிவடைந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு எதிரிடையாக சரியான வருமான மற்றும் செலவுக் கூற்று.**

| கணக்கு குறியீடு | விபரம் | 2011 | | |
|---|---|---|---|---|
| | | சரியான | வரவு செலவு | மாற்றம் |
| | வருமானம் | ரூபா | ரூபா | ரூபா |
| 7512 | 2.0 சந்தைப்படுத்தல் மேம்பாடுகள் | **296,128,999** | **497,945,000** | 40.53 |
| 7515 | புவியியல் ரீதியான | | | |
| 7595 | உற்பத்தி | 296,128,999 | 497,945,000 | 40.53 |
| 7680 / 7682 | தூது கோஷ்டி மற்றும் டயஸ்போரா | | | |
| | | | | |
| 7620 | 3.0 ஆராய்ச்சி | 1,274,931 | **18,350,000** | 93.05 |
| 7620 A | 3.1 வருகை தருவோர் மதிப்பீடுகள் | 5,625 | 2,650,000 | 99.79 |
| 7620 B | 3.2 சந்தைப்படுத்தல உளவு கற்கை நெறிகள் | 1,269,306 | 15,700,000 | 91.92 |
| | | | | |
| 7570 | 4.0 நிகழ்வுகள் | **50,755,537** | **91,275,000** | 44.39 |
| 7520 | 4.1 உள்ளூர் | 50,755,537 | 81,275,000 | 37.55 |
| | 4.2 சர்வதேச | | 10,000,000 | |
| | | | | |
| | 5.0 வாடிக்கையாளர் எளிதாக்குதல் | 7,230,862 | **61,000,000** | 88.15 |
| 7689 | வருகை தருவோர் வசதிகள் கவர்ச்சி அபிவிருத்தி | 7,230,862 | 61,000,000 | 88.15 |
| | | | | |
| | 6.0 விஷேட திட்டங்கள் | **23,701,445** | **31,000,000** | 23.54 |
| 7541 | இலங்கை விஜயம் 2011 | 23,701,445 | 31,000,000 | 23.54 |
| | | | | |
| | 7.0 உள்ளூர் நிர்வாகம் | 70,051,331 | 99,400,000 | 29.53 |
| 7695 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | **11,443,633** | | |
| | மொத்த செலவினம் | **589,847,534** | **1,206,842,000** | **51.12** |
| 2380 | 8.0 IIFA கடன் | 66,666,667 | 55,000,000 | (21.21) |
| | 9.0 மூலதன செலவினம் | 1,553,982 | 80,478,000 | 98.07 |
| | 10.0 திரட்டிய செலவினம் | 38,837,172 | | |
| | **மொத்த செலவினம்** | **696,905,354** | **1,342,320,000** | **48.08** |

# இலங்கை உல்லாசப் பிரயாணத் துறை அபிவிருத்திப் பணியகம் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.

## 1. அறிவிக்கும் தனித்துவம்

### 1.1 கூட்டிணைப்பு

2007 ஒக்டோபர் 1ம் திகதி தொடக்கம் 2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க உல்லாசப் பிரயாணச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.புதிய நிறுவனங்கள் கீழ்க்காணும் முறையில் 2007 ஒக்டோபர் 1ஆம் திகதி தொடக்கம் கூட்டிணைக்கபப்பட்டுள்ளன

- இலங்கை உல்லாசப் பிரயாண அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகம்.
- இலங்கை உல்லாசப் பிரயாண மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்.
- இலங்கை மாநாட்டு பணியகம்.

### 1.2 உல்லாசப் பிரயாண அபிவிருத்தி நிதி விநியோகம்

உல்லாசப் பிரயாணத்துறை சட்டத்தின் பிரிவு 23(1) இற்கமைய ஓர் உல்லாசப் பிரயாண இலக்காக உல்லாசப் பிரயாண அபிவிருத்தி நிதி இலங்கை மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்பட முடியும்.இந்நிதி இலங்கை உல்லாசப் பிரயாண அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமைப்படுத்தப்பட்டு நிருவகிகக்ப்படுகின்றது.

நீதியததின் விநியோகம் கீழ்க்காணும் வீதங்களில் உல்லாசப் பிரயாணச் சட்டத்தின் 24(8) பிரிவுகளுக்கமைய மேற்கொள்ளப்படுகின்றது.

| ஊள்ளூர் அதிகார சபை | வழங்கக்கூடியதான வீதம் |
|---|---|
| இலங்கை உல்லாசப்பிரயாண அபிவிருத்தி அதி-கார சபை | 14% |
| இலங்கை உல்லாசப் பிரயாணத்துறைஅபிரவிருத்திப் பணியகம் | 70% |
| உல்லாசப்பிரயாண ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் | 12% |
| இலங்கை மாநாடு பணியகம் | 4% |

### 1.3 பிரதான செயற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

இலங்கை மக்களின் மற்றும் உல்லாசப் பிரயாணதத்துறை பங்குதாதரர்களின் நன்மைக்காக மிகப் பெரிய வெளிநாட்டு நாணயமாற்று வருமான உழைக்கும் துை-றயாக ஆசிய உல்லாசப் பிரயாணத்துறை சின்னமாக அதன் முகப்புத் தோற்றத்தை உயர்த்தி உறுதியான இயற்கை கலாசார தொழில் முயற்சி வழங்குவதுடன் அதன் அழகான கடற்கரைகள் மற்றும் சிநேகபூர்வமான மக்களுடன் ஆசியாவின் மிக நிதிவளம் மிக்க மற்றும் பசுமையான தீவாக இலங்கையை உருவாக்குதல் மற்றும் வைத்திருத்தல்

**1.4 ஊழியர்களின் எண்ணிக்கை**

இக்காலப் பகுதிக்கான ஊழியர்களின் சராசரி எண்ணிக்கை 49 ஆகும்.

## தயாரிப்பதன் அடிப்படை

**1.5 இணக்கப்பாட்டுக் கூற்று**

நீதிநிலைமை கூற்று நிதி செயற்பாட்டுக் கூற்று தேறிய சொத்து/சமநிலைப்பாட்டிலுள்ள மாற்றங்களின் கூற்று முக்கியத்துவம் வாய்ந்த கணக்கியற் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடனான இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக்கணக்காளர்கள் நிறு வனததினால் முன்வைக்கப்பட்ட இலங்கைப் பொதுத்துறை கணக்கியற் தரங்கள் 2009 இற்கமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.6 அளவீட்டு அடிப்படை**

நிதிக்கூற்றுக்கள் வரலாற்று ரீதியான செலவு மரபு வழிக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.7 சமர்ப்பிக்கப்படுகின்ற நாணய வகை**

நாட்டில் தொழிற்படுகின்ற நாணய வகையான இலங்கை ரூபாவிலே எல்லா நிதிக்கூற்றுக்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.8 மதிப்பீடுகள் மற்றும் வழக்குத் தீர்ப்புகளின் உபயோகம்**

இலங்கை கணக்கியற் தரங்களுக்கு ஒத்ததாக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் முகாமைத்துவத்தை கணக்கியற் கொள்கைகளின் பிரயோகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற வழக்குத் தீர்ப்புகள் மதிப்பீடுகள் செயற்பாடுகளைத் தொடருமாறும் சொத்துக்கள் பொறுப்புகள் வருமானம் மற்றும் செலவினத்தைத் தெரிவிக்குமாறும் வேண்டிக் கொள்கின்றது.உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து வே-றுபடலாம் மதிப்பீடுகள் மற்றும் ஆரம்பிக்கப்படுகின்ற தொழிற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற செயற்பாடு அடிப்படையில் மீள்நோக்கப்படுகின்றன. இக்காலப் பகுதியில் எதிர்காலத்தைப் பாதிக்கின்ற மதிப்பீடுகளும் திருத்தப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்ற தொகைகள் மீது மி-க முக்கியத்துவம் வாய்ந்த கணக்கியற் கொள்கைகள் பிரயோகத்தில் ஆபத்தான வழக்குத் தீர்ப்புகள் பற்றிய தகவல் மற்றும் வருங்காலப் பகுதியல் பொருள் சீராக்கத்திலுள்ள பெறுபேற்றின் முக்கியமானஇடர்பாடுகளைக் கொண்டுள்ள செயற்பாடுகள் ஆரம்பித்தல் மற்றும் மதிப்பீடு நிச்சமற்ற தன்மை போன்றவை குறித்த தகவல்களும் குறிப்பிட்ட குறிப்புக்களில் உட்படுத்தப்படுகின்றன

**1.9 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இலங்கைக் கணக்கியற் தரங்களுக்கு அமைய இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் நியாயமாக சமர்ப்பிப்பதற்கும் முகாமைத்துவமே பொறுப்பாக இருக்கின்றது. இதன் பொறுப்பு பின்வருவனவற்றை உள் ளடக்குகின்றது.வடிவமைத்தல் மோசடி அல்லது தவறு காரணமாக பொருட்கள் தவ-றான கூற்றிலிருந்து விடுவிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நிய-ாயமான முறையில் சமர்ப்பித்தல் தொடர் பாக உள்ளக கட்டுப்பாட்டை அமுல்படுத்தல் மற்றும் பராபமரித்தல் பொருதத்தமான கணக்கியற் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் பிரயோகித்தல் அத்துடன் நியாயமானதெனக் கருதப்படுகின்ற கணக்கியல் மதிப்பீடுகளைத் தயாரித்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது

### 1.10 பிந்திய ஐந்தொகை நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதியின் பின்னர் சம்பவிக்கின்ற எல்லா நிகழ்வுகளும் அத்துடன் தேவையானபோது இந்த நிதிக்கூற்றுக்களுக்கு சீராக்கலகள் அல்லது சேர்ப்புக்களை நாம் செய்துள்ளோம்.

2011 ஆம் ஆண்டின் பொழுது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் வரி ஆலோசகருடன் மீளளிக்கப்படுகின்ற பெறுமதி சேர்த்தல் வரியின் செயற்பாடு மற்றும் அதனை முடிவாக்குகின்ற பணியில் இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகம் ஈடுபட்டிருந்தது.2011 ஆம் ஆண்டின் பொழுது இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகம் வரிவிதிக்கக் கூடியதான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என்பதால் மீளளிக்கப்படுகின்ற பெறுமதி சேர்ப்புவரி கோரிக்கைக்கு உரித்தானதல்ல என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தீர்மானத்தை எடுத்தது. அதனை முடிவாக்குகின்ற பணியில் இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகம் வரி விதிக்கக்கூடிய செயற்பாட்டில் ஈடுபடவில்லை என்பதையுமீளளிக்கப்படுகின்ற பெறுமதி சேர்த்தல் வரிக் கோரிக்கைக்கு உரித்தானதல்ல எனவும் குறிப்பிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து 21.02.2012ஆம் திகதியன்று ஓர் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலை இலங்கை உல்லாசப் பிரயாண அபிவிருத்திப் பணியகம் பெற்றுக் கொண்டது.

ஆகவே பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மீளளித்தல் கோரிக்கைக்கு உரித்தானதல்ல என்பதால் இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறுமதி சேர்ப்புவரி மீளளிப்புக்குசீராக்கல் செய்யப்பட்டடுள்ளது.

### 1.11 ஒப்பீட்டுத் தகவல்

தேவையானபோது நடைமுறை ஆண்டின் சமர்ப்பித்தலை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிட்ட ஒப்பீட்டுத் தொகைகள் மீள்வகுக்கப்பட்டுள்ளன.

## 2. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கியற் கொள்கைகள்

### 2.1 பொருட்பட்டியல்கள்

பொருட்பட்டியல்கள் மிகக் குறைவான செலவில் அல்லது தேறிய தீர்க்கப்படத்தக்க பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன.

### 2.2 பெறுமானத்தேய்வு

கம்பனியின் எல்லா சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் செலவு அல்லது பெறுமதி அடிப்படையில் பின்வரும் கால அடிப்படையில் மதிப்பிடப்பட்ட பிரயோக காலத்திற்குப் பொருத்தமான கால பகுதிக்கு நேர்கோட்டு அடிப்படையில் அவற்றின் சொத்து/பெறுமானத்தை தள்ளுபடி செய்யக்கூடிய வகையில் பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு கணக்கிடப்படுகின்றது

| விபரம் | வீதம் |
|---|---|
| தளபாடமும் இணைப்புக்களும் | 7.5% |
| கணனி மற்றும் உபகரணம் | 2.5% |
| மோட்டார் வாகனங்கள் | 2.5% |
| காற்றுச் சீராக்கிகள் | 7.5% |
| அலுவலக உபகரணம் | 7.5% |
| தொலைபேசி | 7.5% |
| நானாவித உபகரணம் | 7.5% |
| சொப்ட்வெயார் | 7.5% |
| கட்டட அபிவிருத்தி | 10% |

### 2.3 சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன கூட்டுபெறுமானத் தேய்வுமற்றும் கூட்டு சேதப்பாடு நஷ்டம் கழிக்கப்பட்ட பெறுமதியிலும் குறிப்படப்படுகின்றன. இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகத்தின் வளவு இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானதாகும்.

### 2.4 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்.

இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் கீழ்க்காணும் வீதங்களில் மாற்றப்படுகின்றன.

- பெறுகைகளும் கொடுப்பனவுகளும் - சரியான வீதம்
- நடைமுறை சொத்துக்களும் பொறுப்புக்களும். - முடிவு வீதம்
- நிலையான சொத்துக்கள் - சரியான வீதம்
- செலுத்து தொகைகள் - சரியான வீதம்

### 2.5 சம்பந்தப்பட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்.

இலங்கை கணக்கியல் தரங்கள் 24 இற்கமைய சேர்க்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறவில்லை.

### 2.6 ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடு.

இலங்கை கணக்கியற் தரங்களுக்கு அமைய ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ள சகல ஊழியர்களுக்கும் 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க ஓய்வூதிய பணிக்கொடைக் கொடுப்பனவின் கீழ் ஓய்வூதிய பணிக்கொடைக் கணக்கின் பேரில் கொடுப்பனவு நிலுவைக்கு கம்பனி முழுமையான ஏற்பாடு செய்துள்ளது.

### 2.7 திரட்டிய செலவினம்.

கணக்கியற் தரங்களுக்கு அமைய பட்டியலிடப்பட்ட அல்லது வழங்குனருடன் சம்மதிக்கப்பட்ட வழமையான பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது விநியோகிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்காக செலுத்த வேண்டிய பொறுப்புக்களே திரட்டிய செலவினம் என அறியப்பட்டுள்ளது.

ஆகவே மேற்கூறப்பட்ட வரைவிரக்கணத்திற்கமைய IIFA அடிப்படையில் செலுத்த வேண்டிய செலவினமாகக் காண்பிக்கப்பட்டுள்ள தொகையே திரட்டிய செலவினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 2.8 வரிவிதிப்பு.

1979 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 8 (அ) (XX) இன் கீழ் உல்லாசப் பிரயாண சபை வருமான வரியிலிருந்து விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.

### 2.9 ஏனைய வருமானம்.

ஏனைய எல்லா வருமானமும் திரட்டிய அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை உல்லாசப் பயணத்துறை அபிவிருத்திப் பணியகத்தினால் ஒழுங்க செய்யப்பட்டு நடாத்தப்பட்ட வெளிநாட்டு வர்த்தக சந்தைகளில், தனிப்பட்ட பங்கெடுத்தோரிடமிருந்து அறவிடப்பட்ட செலவுத் தொகையையே வியாபாரப் பங்களிப்புக் குறிப்பிடுகின்றது.

### 2.10 நிதி ஓட்டக் கூற்று.

நிதி ஓட்டக் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கியற் தரம் ‘‘நிதி ஓட்டக் கூற்றுக்கு’’ அமைய நிதி ஓட்டங்களின், ‘‘நேரடியற்ற முறை’’யைப் பயன்படுத்தியே நிதி ஓட்டக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. அறியப்பட்டுள்ள காசு தொகைகளுக்கு ஏற்கனவே மாற்றக் கூடியதாகவுள்ள குறுகிய தவணை, உயர்திரவ முதலீடுகளை காசு மற்றும் காசுக்குச் சமனானவை உள்ளடக்கியுள்ளதுடன் பெறுமதியில் முக்கியத்துவமற்ற இடர்பாடு மாற்றங்களுக்கு உட்பட்டதாகும். காசு மற்றும் காசுக்குச் சமனானவை கையிலுள்ள காசையும், வங்கியிலுள்ள மிகுதியையம் உள்ளடக்குகின்றது.

## இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.
## நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.

**03.0 காசு மற்றும் காசுக்குச் சமனானவை.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு - தலைமையகம் பிரதான கணக்கு | 728,520,593.19 | 141,288,205.78 |
| வங்கியிலுள்ள காசு - தலைமையகம் தனியார் துறை | 85,980,601.90 | 29,929,681.65 |
| வங்கியிலுள்ள காசு - கண்டி | 391,507.68 | 482,293.33 |
| வங்கியிலுள்ள காசு - வங்கி மாற்றம் | 5,105,096.42 | 5,673,237.95 |
| வெளிநாட்டு அலுவலகம் - யூ. கே | (222,918.53) | 5,399.43 |
| வெளிநாட்டு அலுவலகம் - இந்தியா | 78,700.36 | 78,700.36 |
| **மொத்த காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | **819,853,581.02** | **177,457,518.50** |

**04.0 பெறவேண்டியவை.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| நுகர்வாளர் கையேடு – யூ. கே | 3,304,920.00 | 3,304,920.00 |
| எரிபொருள் வைப்பு | 100,000.00 | 100,000.00 |
| வாகனம் வாடகைக்கு அமர்த்தல் வைப்பு | 20,000.00 | 20,000.00 |
| வளவைப் புதுப்பித்தல் | - | 153,025.05 |
| காசு மீளப் பெறுதல் செலவு | 2,557,792.08 | 900,000.00 |
| கப்பலில் ஏற்றும் வரி | 123,461,589.83 | 198,843,773.23 |
| உல்லாசப் பிரயாண அபிவிருத்தி வரி | 211,152,119.56 | 167,072,332.82 |
| ஏனையவை | 12,732.50 | - |
| **மொத்த பெற வேண்டியவை** | **340,609,153.97** | **370,394,051.10** |

**05.0 முற்பணங்கள்.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| உள்ளூர் முற்பணங்கள் | 2,005,987.50 | 1,650,378.88 |
| வெளிநாட்டு முற்பணங்கள் | 1,397,105.70 | 377,791.54 |
| **மொத்த முற்பணங்கள்** | **3,403,093.20** | **2,028,170.42** |

**06.0 முன்கொடுப்பனவுகள்.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| சேவை ஒப்பந்தம் | - | 40,259.37 |
| நிதி சார் பங்களிப்பு | 56,304.78 | 1,500,000.00 |
| வருடாந்த அங்கத்துவம் யூ. கே | 174,819.07 | - |
| **மொத்த முன்கொடுப்பனவுகள்** | **231,123.85** | **1,540,259.37** |

**07.0 கடன்பட்டோர்.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| சில்லறை கடன்பட்டோர் - SLTDA | 31,141,767.55 | 30,967,542.30 |
| சில்லறை கடன்பட்டோர் - SLITHM | 658,734.30 | 208,171.60 |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | 2,267,240.00 | 1,975,855.00 |
| **மொத்த கடன் பட்டோர்** | **34,067,741.85** | **33,151,568.90** |

**இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.**

**நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.**

| விபரம் | 01/01/2011ல் மிகுதி | சேர்ப்புக்கள் | மாற்றம் | 31/12/2011 இல் மிகுதி | திரட்டிய பெறுமானத் தேய்வு 01/01/2011 அன்றுள்ளவாறு | 2011க்கான பெறுமானத் தேய்வு | விற்பனை மீதான பெறுமானத் தேய்வு 2011 | திரட்டிய பெறுமானத் தேய்வு 31/12/2011 அன்றுள்ளவாறு | தேறிய புத்தகப் பெறுமதி 31/12/2011 அன்றுள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தொலைபேசிகள் | 437,500.00 | 281,923.00 | 11,600.00 | 707,823.00 | 46,453.04 | 35,751.71 | 2,605.79 | 79,598.96 | 628,224.04 |
| அலுவலக உபகரணங்கள் | 2,758,021.00 | 338,205.00 | 113,703.50 | 2,982,522.50 | 508,827.13 | 207,048.69 | 37,549.55 | 678,326.27 | 2,304,196.23 |
| தளபாடமும் இணைப்புக்களும் | 8,535,141.89 | 13,490.00 | 16,100.00 | 8,532,531.89 | 1,728,119.03 | 638,841.97 | 4,508.00 | 2,362,453.00 | 6,170,078.89 |
| நானாவித உபகரணங்கள் | 809,135.35 | | | 809,135.35 | 135,029.22 | 60,685.20 | | 195,714.42 | 613,420.93 |
| மோட்டார் வாகனங்கள் | 7,400,000.00 | | | 7,400,000.00 | 3,300,000.00 | 1,850,000.00 | | 5,150,000.00 | 2,250,000.00 |
| கணனி உபகரணங்கள் | 8,724,079.81 | 920,164.00 | 465,210.00 | 9,179,033.81 | 6,309,523.77 | 1,067,335.16 | 421,052.21 | 6,955,806.72 | 2,223,227.09 |
| கணனி மென்பொருட்கள் | 867,750.00 | | | 867,750.00 | 129,025.46 | 65,081.25 | | 194,106.71 | 673,643.29 |
| காற்று சீராக்கிகள் | 717,900.00 | | | 717,900.00 | 40,924.65 | 53,842.50 | | 94,767.15 | 623,132.85 |
| **மொத்தம்** | **30,249,528.05** | **1,553,782.00** | **606,613.50** | **31,196,696.55** | **12,197,902.30** | **3,978,586.48** | **465,715.55** | **15,710,773.23** | **15,485,923.32** |

**08.0 சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்.**

## இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.
## நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.

**09.0 முற்பணத்தில் வருமானம்.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| வெளிநாட்டு வியாபார சந்தைகள் | 5,585,302.75 | 7,417,059.71 |
| **முற்பணத்தில் மொத்தவருமானம்** | **5,585,302.75** | **7,417,059.71** |

**10.0 செலுத்த வேண்டிய வைப்பு.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| மீளளிக்கப்படவேண்டிய கேள்வி வைப்பு | 353,080.00 | 357,330.00 |
| செலுத்த வேண்டிய தேக்கி வைப்பு | 193,553.40 | 620,737.08 |
| ஏனையவை | 6,034.34 | - |
| **மொத்த செலுத்த வேண்டிய வைப்பு** | **552,667.74** | **978,067.08** |

**11.0 ஊழியர் நலனோம்பல்கள்.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| முன் கொண்டு செல்லப்பட்ட ஓய்வூதிய பணிக் கொடைக்கான ஏற்பாடு | 5,004,637.50 | 4,741,257.50 |
| பணிக்கொடை ஏற்பாடு | 991,715.13 | 346,540.00 |
| செலுத்திய பணிக்கொடை | - | (83,160.00) |
| **மொத்த ஊழியர் நலனோம்பல்கள்** | **5,996,352.63** | **5,004,637.50** |

**12.0 கடன் கொடுத்தோர்.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| சில்லறை கடன் கொடுத்தோர் - IIFA | | 141,701,672.99 |
| சில்லறை கடன் கொடுத்தோர் - SLTDA | 25,334,176.74 | 43,854,168.51 |
| சில்லறை கடன் கொடுத்தோர் - SLTTHM | 54,179.00 | 217,458.50 |
| **மொத்த கடன் கொடுத்தோர்** | **25,388,355.74** | **185,773,300.00** |

**13.0 ஏனைய வருமானம்.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| இலக்கியம் மற்றும் புகைப்படக் கருவிகளிலிருந்து வருமானம் | 86,900.00 | 358,563.00 |
| வட்டியிலிருந்து வருமானம் - ஊழியர் குழாம் கடன் | 68,503.38 | 60,442.69 |
| வியாபார பங்களிப்பு | 59,722,990.34 | 41,109,717.28 |
| IIFA ஏற்பாடு மற்றும் டிக்கட் விற்பனை | - | 30,976,568.47 |
| ஏனையவை | 4,366,284.53 | 6,954,299.28 |
| **மொத்த எனைய வருமானம்** | **64,244,678.25** | **79,459,590.72** |

## இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.
## நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.

**14.0 கூலிகள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நலனோம்பல்கள்.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| சம்பளங்களும் அலவன்ஸுகளும் | 18,224,499.97 | 16,040,469.29 |
| விடுமுறை அலவன்ஸ் | 53,340.25 | 38,846.80 |
| மேலதிக நேர வேலை | 688,560.15 | 601,333.55 |
| ஊ. சே. நி. க்கு சபையின் பங்களிப்பு | 1,995,798.39 | 1.813,437.37 |
| ஊ. ந. நி. க்கு சபையின் பங்களிப்பு | 400,057.85 | 374,056.64 |
| ஊழியர் குழாம் நலன்புரி | 2,314,418.32 | 985,540.19 |
| பிரயாணம் - உள்ளுர் | 39,772.00 | 29,414.50 |
| வரவு ஊக்குவிப்பு | - | 570,453.85 |
| ஊழியர் குழாமிற்கு சீருடை | 145,461.00 | 109,200.00 |
| பணிக்கொடை | 991,715.13 | 346,540.00 |
| காப்புறுதி | 696,531.25 | 761,643.92 |
| ஊழியர் குழாம் பயிற்சியளித்தல் | 570,851.58 | 750,342.35 |
| **மொத்த கூலிகள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நலனோம்பல்கள்.** | **26121,005.89** | **22,421,278.46** |

**15.0 வழங்கல்களும் பாவிக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களும்**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| நானாவித வழங்கல்கள் | 84,505.00 | 286,922.89 |
| காகிதாதி | 1,150,805.98 | 1,303,748.80 |
| அச்சிடல்கள் மற்றும் பிரசுரங்கள் | - | 32,000.00 |
| தொலைபேசி மற்றும் இன்டர்நெட் | 1,678,472.78 | 1,674,634.34 |
| தபால், கூரியர் மற்றும் முத்திரைகள் | 3,030,129.65 | 5130,380.04 |
| வாடகை, கட்டடம் | 11,686,184.00 | 10,646,376.12 |
| மின்சாரம் | 3,053,054.86 | 2,478,853.62 |
| பராமரிப்பு – உபகரணம் | 2,749,896.98 | 1,335,206.50 |
| விளம்பரம் - பொது | 194,790.00 | 2,312,012.45 |
| பராமரிப்பும் திருத்தங்களும் - வாகனங்கள் | 1,133,562.42 | 601,978.79 |
| வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் | 2,354,077.95 | 1,701,237.50 |
| நீர் | 1,036,670.88 | 211,609.70 |
| புத்தகங்களும் பருவ வெளியீடுகளும் | 128,312.50 | 300,287.80 |
| எரிபொருள் கட்டணங்கள் | 779,692.25 | 730,914.50 |
| பொழுது போக்கு – உள்ளுர் | 105,713.42 | 147,122.07 |
| சுத்திகரிப்பு விநியோத்தர்கள் | 10,67312.29 | 908,916.46 |
| பாதுகாப்பு | 445,678.86 | 498,578.46 |
| பராமரிப்பு – கட்டடம் | 613,347.79 | 211,227.00 |
| கட்ணங்களும் அனுமதிப் பத்திரங்களும் | 5,430.00 | 2,922.00 |
| மெனு மற்றும் பூக்கள் | 240,110.00 | 90,750.00 |
| கட்டட அபிவிருத்தி | - | 4,098,784.41 |
| **மொத்த விநியோகங்களும் பாவிக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களும்** | **31,537,697.61** | **34,704,463.45** |

**16.0 வியாபாரம் தொடர்பான செலவினம் - வெளிநாடு.**

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| நிருவாகம் யூ. கே | 30,805,777.48 | 29,910,841.62 |
| **மொத்த வியாபாரம் தொடர்பான செலவினம் - வெளிநாடு** | **30,805,777.48** | **29,910,841.62** |

## இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.
## நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.

### 17.0 வியாபாரம் தொடர்பான செலவினம் - உள்ளூர்.

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| மேம்பாடுகள் மற்றும் விளம்பரம் வெளிநாடு | 172,864,586.00 | 188,058,406.03 |
| உள்ளூர் விழிப்புணர்ச்சி நடவடிக்கை | 48,246,815.55 | 18,706,295.85 |
| மேம்பாடுகள் மற்றும் விளம்பரம் - உள்ளூர் | 22,144,984.83 | 55,887,653.67 |
| உல்லாசப் பிரயாணி தொலைத் தொடர்பு சாதன உற்பத்தி | 41,092,395.61 | 29,273,416.78 |
| நிகழ்வுகள் | 45,937,549.54 | 18,842,496.53 |
| VJP மற்றம் வியாபார FAM டுவர்ஸ் | 22,921,596.60 | 19,748,176.45 |
| உபாய கட்டமைப்பு வேலை | - | 592,880.00 |
| தேங்கி நிற்போர் கட்டணம் - PR | 22,737,070.92 | 38,784,877.91 |
| முகாமைத்துவக் கட்டணம், கலை வேலைப்பாடு / ஆக்கங்கள் | 5,464,671.05 | 7,782,554.25 |
| சந்தை ஆராய்ச்சி | 1,274,931.19 | 8,578,669.82 |
| IIFA | - | 478,013,162.37 |
| வியாபார சந்தை - ITB | 32,412,178.74 | 25,100,776.53 |
| வியாபார சந்தை – WTM | 35,360,792.60 | 38,333,362.71 |
| இணைய பராமரிப்பு மற்றும் மின்னியல் செய்திகள் | 1,242,182,46 | 2,620,191.29 |
| இலங்கைக்கு விஜயம் செய்யுங்கள் | 23,701,445.29 | 6,944,786.27 |
| தேங்கி நிற்போர் கட்டணம் - விளம்பர முகவர் நிலையம் | - | 4,177,539.18 |
| நாணயமாற்று இலாபம் / நட்டம் | 42,924.00 | 1,219,153.86 |
| ராமநாயக்க | - | 1,919,619.56 |
| தூதுகோஷ்டிகளுடன் வேலை செய்தல் | 2,102,668.06 | 5,186,021.37 |
| **மொத்த வியாபாரம் தொடர்பான செலவினம் - உள்ளூர்** | **477,546,792.44** | **949,770,040.43** |

### 18.0 ஏனைய செலவினங்கள்.

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| சபை அங்கத்தவர் அலவன்ஸ் | 314,136.87 | 79,500.00 |
| கொள்வனவு குழு அங்கத்தவர் அலவன்ஸ் | 65,500.00 | 298,500.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | 400,000.00 | - |
| சட்டக் கட்டணம் | 2,316.00 | 109,615.00 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | - | 72,276.03 |
| முத்திரை வரி | 12,500.00 | 9,425.00 |
| நட்டங்களும் தள்ளுபடிகளும் | 108,737.97 | (18,161.42) |
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 11,443,632.64 | 43,071,919.24 |
| NBT | 2,265,824.61 | 3,995,893.36 |
| **மொத்த ஏனைய செலவினங்கள்** | **14,612,648.09** | **47,618,967.21** |

### 19.0 நிதிச் செலவினங்கள்.

| விபரம் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| IIFA கடன் வட்டி மற்றும் வங்கிக் கட்டணங்கள் | 5,026,484.03 | 5,852,511.41 |
| வரவு வரி | 172,943.48 | 1,179,242.48 |
| வங்கிக் கட்டணங்கள் | 45,598.00 | 185,769.75 |
| **மொத்த நிதிச் செலவுகள்** | **5,245,025.51** | **7,217,523.64** |

## இலங்கை உல்லாசப்பயணத்துறை அபிவிருத்திப் பணியகம்.
## நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.

**20.0 ஒப்பீட்டுத் தகவல்.**

**நிதி நிலைமை பற்றிய கூற்று**

| சொத்துக்கள் | 31/12/2010ல் குறிப்பிடப்பட்ட மிகுதி (ரூபா) | சீராக்கல் 2010 (ரூபா) | மீளக் குறிப்பிடப்பட்ட மிகுதி 31/12/2010 (ரூபா) |
|---|---|---|---|
| **நடைமுறை சொத்துக்கள்** | | | ற |
| பெற வேண்டியவை | 424,621,335.73 | (54,227,284.63) | 370,394,051.10 |
| முற்பணங்கள் | 4,803,676.04 | (2,775,505.62) | 2,028,170.42 |
| கடன்பட்டோர். | 33,141,568.90 | 10,000.00 | 33,151,568.90 |

**நடைமுறை பொறுப்புக்கள்.**

| | | | |
|---|---|---|---|
| திரட்டிய செலவினங்கள் | 93,941,483.40 | (55,073,490.61) | 38,867,992.79 |
| கடன் கொடுத்தோர் | 185,352,336.26 | 420,963.74 | 185,773,300.00 |

**நிதிசார் செயற்பாடு கூற்று.**

**வருமானம்.**

| | | | |
|---|---|---|---|
| கப்பலில் ஏற்றும் வரி | 683,451,883.18 | (12.055,437.10) | 671,396,446.08 |
| உல்லாசப் பயண அபிவிருத்தி வரி | 359,274,914.50 | 71.71 | 359,274,986.21 |
| ஏனைய வருமானம் | 78,559,590.72 | 900,000.00 | 79,459,590.72 |

**செலவினங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| கூலி சம்பளங்கள் மற்றும் ஊழியர் நலனோம்பல்கள் | 23,045,559.16 | (624,280.70) | 22,421,278.46 |
| விநியோகங்களும் பாவிக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களும் | 35,775,107.42 | (1,070,643.97) | 34,704,463.45 |
| வியாபாரம் தொடர்பான செலவினம் - வெளிநாடு | 32,910,539.37 | (2,999,697.75) | 29,910,841.62 |
| வியாபாரம் தொடர்பான செலவினம் - உள்ளூர் | 996,662,439.26 | (46,892,398.83) | 949,770,040.43 |
| ஏனைய செலவினங்கள் | 4,847,047.95 | 42,771,919.24 | 47,618,967.21 |

CHECKED / RETURNED
Signature: ..........
Name: ..........

ரீஎம்/எச்/எஸ்எல்ரீபிபீ/எப்ஏ/2011 2012 ஒக்தோபர் 31

தலைவர்

இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம்

**இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின்படி பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின்படியான விரிவான அறிக்கையொன்று 2012 ஆகஸ்ட் 08 இல் பணியகத்தின் தலைவரிற்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

CHECKED

..................

1.4 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக் கூற்றுக்கள்**

2.1 **அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகத்தின் நிதி நிலைவரம் மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கப்படுகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இ.க.நியமங்களிற்கான தொடர்பு | இயங்காமை |
|---|---|
| இ.க.நி - 10 | (அ) முன்னைய ஆண்டு தவறுகளிற்காக செய்யப்பட்ட திருத்தங்களாக திரண்ட மிகைக் கணக்கிற்கு ரூபா 2,340,263 ஆன தொகை சீராக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்தச் சீராக்கல்கள் இ.க.நி – 10 இல் குறிப்பிடப்பட்ட திருத்த நடைமுறையின்படி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (ஆ) தொடர்புடைய தகவல்களின் அடிப்படையில் சாத்தியமான அட்டுறு பொறுப்பினைக் கருத்திற்கொள்ளாமல் பணியகத்தின் உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காக ரூபா 223 பில்லியன் தொகையான அட்டுறு செலவினங்களிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. |

CHEC

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 1,167,900 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட எட்டு மடி கணனிகள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,150,000 தொகையான வழங்கப்பட்ட நன்கொடைகள் உள்ளூர் ஊக்குவிப்பு செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) சர்வதேச இந்தியன் திரைப்பட அக்கடமி (ஐஐஎவ்ஏ) விழாவிலிருந்தான உள்ளபடியான வருமானம் முறைப்படி இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின் போது பெறவேண்டிய வருமானமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொருட்கள் மற்றும் சேவைகள் உரிய வழங்குநர்களிடமிருந்து உள்ளபடியாகவும் சரியாகவும் பெறப்பட்டிருந்தனவா என உறுதிப்படுத்தப்படாமல் அட்டுறு செலவினங்களின் கீழ் சர்வதேச இந்தியன் திரைப்பட கழக விழாவிற்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளிற்கு செலுத்த வேண்டியவையாக ரூபா 120,694,122 ஆன தொகை கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

உரிய உப பதிவேட்டு மீதிகளுடன் மீதிகள் இணங்கம் செய்யப்படாமை காரணமாக பணியகத்தின் நிதிக் கூற்றுக்களிற்கும் தொடர்புபட்ட உப பதிவேடுகளிற்கும் இடையில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

CHECKED

| விபரங்கள் | நிதிக் கூற்றுக்களின்படி மீதி | உபபதிவேட்டு விபரம் | உப பதிவேட்டின்படி மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா |
| இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு செலுத்த வேண்டியவை (எஸ்எல்ஜரீஎச்எம்) | 54,179 | எஸ்எல்ஜரீஎச்எம் இன் கணக்குகள் | 734,655 | 680,476 |
| எஸ்எல்ஜரீஎச்எம் இடமிருந்து பெறவேண்டியவை | 658,734 | மேற்படி | இல்லை | 658,734 |

**2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சர்வதேச இந்தியன் திரைப்படக் கழக விழா ஒழுங்கு செய்கின்ற நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய கணக்குகள் சொல்லப்பட்ட அமைப்பிலிருந்து பெறவேண்டியவையாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி, பணியகத்தால் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்பட்ட ஹோட்டல் அறை வசதிகள் தொடர்பில் மேற்குறித்த நிறுவனத்திடமிருந்து அண்ணளவாக ரூபா 20 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) ரூபா 3,304,920 தொகையான யூ.கே அலுவலகத்திலிருந்து பெறவேண்டியவைகள் இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு மேலாக உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

CHECKED

(இ) இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு (எஸ்எல்ரீடிஏ) சொந்தமான கட்டிட நவீனமயப்படுத்தல் தொடர்பில் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 28,047,842 தொகையான பணியகத்தால் செய்யப்பட்ட மூலதனச் செலவினத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 107,416,107 கூட்டுமொத்தத் தொகையான ஏழு கணக்கு விடயங்கள் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை மற்றும் வருகைதருகின்ற ஊடகவியலாளர் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான செய்தித்துறை வெளியீடுகள் தொடர்பான விரங்கள், விரிவான பட்டோலைகள், மெய்மையாய்வு அறிக்கைகள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் விலைப்பட்டியல்கள், விமானப் பிரயாணத்தை மேற்கொள்வோர் பற்றிய விபரங்கள், ஆதாரமான ஆவணங்கள் போன்ற அத்தகைய சான்றுகள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

**2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 2 இன் பிஈடி/12 ஆம் இலக்க நல்ல ஆழுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிகள் | |
| (i) அத்தியாயம் 6 இன் 6.5.1 ஆம் பிரிவு | வருடாந்த வரைவு அறிக்கையானது நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த வரைவு அறிக்கை 2012 யூலை 31 வரை |

CHECKED

| | |
|---|---|
| | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் 9 இன் 9.12 ஆம் பிரிவு | முயற்சியாளர்களால் பின்பற்றப்படும் எந்தவொரு நலன்புரித் திட்டத்தின் பொது திறைசெரியின் அங்கீகாரம் வைத்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் பணியகமானது இத் தேவைப்பட்டின்படி ஊழியர் மருத்துவ காப்புறுதித் திட்டத்திற்காக அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் 9 இன் 9.14.1 ஆம் பிரிவு | மனித வள முகாமைத்துவம் தொடர்பான சகல விடயங்கள் மீதான விதிகள் மற்றும் பிரமாணங்கள் வழங்கும் மனித வள முகாமைத்துவம் மீதான அத்தியாயம் ஒன்றுடன் நடைமுறை கைநூல்கள் திறைசேரி செயலாளரின் ஒத்திசைவுடன் சேர்த்து சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் பணியகமானது இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ஆ) 2006 சனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கையின் 4.2.1(ஏ) ஆம் பிரிவு | அடுத்த ஆண்டிற்கான விரிவான திட்டத்துடன் சேர்த்து குறைந்தது மூன்று ஆண்டுகளை உள்ளடக்கிய கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் பணியகமானது வேண்டப்பட்டவாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந்திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பணயகத்திற்கு சொந்தமான கணனிகள், கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் என்பவற்றிற்கான நிலையான சொத்துப் பதிவேடு சுற்றறிக்கை வேண்டுதலின்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2011 சனவரி 11 ஆந்திகதிய பிஈடி/56 ஆம் இலக்க பொது | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறாறு அரச நிறுவனங்களின் காசு மிகைகள் |

CHECKED

முயற்சிகள் சுற்றறிக்கை

அடுத்த 6 மாதகால தொழிற்படு மூலதன தேவைகளை கருத்திற் கொண்ட பின்னர் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் இது திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப் பட்டிருக்கவில்லை. கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீட்டின்படி மீளாய்வாணடிற்கான காசு மிகை சுமார் ரூபா 500 மில்லியனாக இருக்கலாம்.

(உ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை

சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி, பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மாதம் ஒன்றிற்கு ஆகக் கூடியது 120 லீற்றர்கள் எரிபொருள் பெறுவதற்கு தகுதியுள்ளவராவர். எவ்வாறாயினும் முகாமைத்துவப் பணிப்பாளர் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களைக் கருத்தில் கொள்ளாமல் மாதம் ஒன்றிற்கு ஏறத்தாழ 207 லீற்றர்கள் எரிபொருள் பெற்றிருந்தார்.

(ஊ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடி/ஜீஈஎன்/2011/1 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

அரசாங்க நிறுவனங்கள் அல்லது அரசாங்க அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தவிர ஏதாவது ஒரு பகுதியினருக்கு செய்யப்பட்ட ரூபா 100,000 ஐ விஞ்சி அங்கீகரித்த வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தில் ஏதாவது நன்கொடைகள்/ அனுசரணைகளிற்காக கௌரவ நிதி மற்றும் திட்டமில் அமைச்சின் அங்கீகாரம் பெறுவதற்கு பொது முயற்சிகள் வேண்டப்பட்டிருந்தன. மேற்சொல்லப்பட்ட அங்கீகாரத்தைப் பெறாமல் இரண்டு தனியார் நிறுவங்களிற்கு ரூபா 1,150,000 ஆன தொகை நன்கொடை அளிக்கப்பட்டிருந்தது.

CHECKED

(எ) நிதிப்பிரமாணங்கள்

| | |
|---|---|
| (i) நி.பி 371 | பதின் மூன்று சந்தர்ப்பங்களில் ஆகக் கூடிய எல்லையான ரூபா 20,000 ஐ விஞ்சி உத்தியோகத்தர்களிற்கு ரூபா 7,882,940 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஏ) தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் VI இன் 2.10 ஆம் பிரிவு | ஆட்சேர்ப்பு, இடமாற்றங்கள், பதவியுயர்வுகள், சம்பள ஏற்ற கொடுப்பனவுகள் ஊழியர்களிற்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட கடிதங்களின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பணியகம் கணக்காய்விற்கு சொல்லப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்திருக்கவில்லை. |

### 2.2.7 அனுமதியளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் அங்கீகாரம் பெறாமல் மீளாய்வாண்டின் போது யூகே அலுவலகத்திற்கு மூன்று உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் அந்த ஊழியர்களிற்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 3,786,970 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 12,280,470 ஆன மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 658,411,571 ஆன நேரொத்த மிகையினை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 646,131,101 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. ரூபா 138,128,082 ஆல் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு உள்வருகை வரி மற்றும் ஏனைய வருமானத்தின் அதிகரிப்பு மற்றும் ரூபா 472,223,248 ஆல்

CHECKED

உள்ளூர் ஊக்குவிப்புச் செலவினத்தின் குறைவு என்பன நிதிசார் விளைவுகளின் அதிகரிப்புக்கான பங்களிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான பணியகத்தின் வருமானம் 12 % அதிகரிப்பை பிரதிநிதித்துப்படுத்துகின்ற முன்னைய ஆண்டிலுள்ள ரூபா 1,110 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,248 மில்லியனாக இருந்த அதேநேரம் மீளாய்வாண்டின் போது சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நடவடிக்கைகளிற்காக செலவழித்த செலவினத்தை முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,098 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 590 மில்லியனாக இருந்தது. இது 86 % குறைவாகக் காட்டுகிறது. மீளாய்வாண்டிற்கான பணியகத்தின் வருமானம் மற்றும் செலவினத்தின் மாற்றங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2011 | 2010 | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | ரூபா (மி) | ரூபா (மி) | ரூபா (மி) | % |
| வெளிநாட்டுனர் வருகை மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி | 1,184 | 1,030 | 154 | 15 |
| ஏனைய வருமானம் | 64 | 79 | 15 | 23 |
| நிர்வாகச் செலவினம் | 58 | 57 | 01 | 1.7 |
| சுற்றுலாத்துறை மேம்பாட்டு செலவினம் | 508 | 979 | 472 | 93 |
| பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவினம் | 24 | 61 | 37 | 154 |
| தேறிய மிகை | 658 | 12 | 646 | 5,383 |

## 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

| உரிமை மூலதன விகிதங்கள் | நியம விகிதம் | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2.1 | 4.63 | 2.47 | 1.73 |

CHECKED

| | | | | |
|---|---|---|---|---|
| விரைவு விகிதம் | 1.1 | 4.60 | 2.45 | 1.71 |

முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டு இறுதிவரை நடைமுறை மற்றும் விரைவு விகிதங்கள் படிப்படியாக அதிகரித்திருந்தன. மொத்த நடைமுறைச் சொத்தில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் முறையே 68 % மற்றும் 30 % ஐ பிரதிநிதித்துவப்படுத்தியது. எவ்வாறாயினும், முறையான காசு முகாமைத்துவம் இன்மை காரணமாக மிகை காசு நீண்ட மற்றும் நடுத்தரகால முதலீடுகளில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு முழுவதும் வங்கிக் கணக்குகளிலுள்ள மிகைக் காசு மீதிகள் ரூபா 500 மில்லியனிற்கு மேலாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.1 சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளிற்காக முறையே ரூபா 508 மில்லியன் மற்றும் ரூபா 979 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது நடத்தப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) யூகே அலுவலக நடவடிக்கைகள்

யூகே அலுவலகத்தின் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நடாத்தப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது யூகே மற்றும் அயர்லாந்தில் நடாத்தப்பட்ட இணைந்த சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளிற்காக முறையே ரூபா 1,613,571 மற்றும் ரூபா 6,973,111 ஆன தொகைகள் செலவழிக்கப்பட்டிருந்தன.

CHECKED

.....................

எவ்வாறாயினும், நடவடிக்கைகளில் எதிர்பாரக்ப்பட்ட விளைவுகளை மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பணியகத்தின் நடைமுறைகளின்படி, நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்குகான கிரய நல பகுப்பாய்வு மற்றும் கிரய மதிப்பீடு வழங்குவதன் மூலம் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், நிகழ்ச்சித்திட்டம் நடாத்த தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுடன் உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) பணியகத்தின் தலைமை அலுவலகத்தின் அங்கீகாரம் இல்லாமல் அவசர தேவைகளாகக் குறிப்பிடப்பட்டு 2000 கட்லொக்குகள் அச்சிடலிற்காக ரூபா 519,000 ஆன தொகை செலவு ஏற்பட்டிருந்தது. அவற்றின் பயன்பாடு தொடர்பில் கட்லொக்குகள் மற்றும் தகவல்களிற்காக புயன்படுத்திய விடயங்கள் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருகைதருகின்ற பத்திரிகையாளர் நிகழ்ச்சித்திட்டங்கள் (வீஜேபி) மற்றும் நெருக்கமான சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துதல்

(i) மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 22.9 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் நடாத்த வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை நாட்டிற்கான அதிகூடிய நன்மைகளை எய்தும் நோக்கில் அதிகளவு சாதகமான மற்றும் பொருத்தமான பத்திரிகையாளர்களைச் தெரிவு செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. ஆகவே அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் முறையான ஊடகத்துறை தெரிவுத் திட்டம் இல்லாமல் எழுந்தமான அடிப்பயில் நடாத்தப்பட்டுள்ளனவென அவதானிக்கப்பட்டது.

(ii) ஏறத்தாழ 183 பத்திரிகையாளர்கள் மீளாய்வாண்டின் போது விஜேபி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக பங்குபற்றியிரந்தனர். எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்டங்களிற்காக பத்திரிகையாளர்களைத்

CHEC...D

தெரிவு செய்வதற்கான பிரமாணம் எதிர்பார்கக்ப்பட்ட விளைவை எய்தும் நோக்கில் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 22.9 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு பத்திரிகையாளர்களால் எதிர்பார்க்கப்பட்டவாறு வழங்கப்பட்ட ஊடகத்துறை விளம்பரம் தொடர்பில் எவ்வித சான்றுகளும் இருக்கவில்லை.

(இ) இந்தியன் திரைப்பட கழக விருதுவழங்கல் விழா (ஐஎவ்எவ்ஏ):

இந்த விழாவிற்காக ரூபா 478 மில்லியன் தொகை செலவு ஏற்பட்டிருந்ததுடன் மொத்தச் செலவில் மீளாய்வாண்டின் போது அட்டுறு செலவினங்களாக ரூபா 141 மில்லியன் தொகை கணக்கிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கான என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சில விடயங்கள் கீழே காட்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போதும் கூட இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை.

(i) ஐஏஐஎவ்ஏ கிறிக்கெட் போட்டி

- அச்சிடப்பட்ட அனுமதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றினுடைய தொடர் இலக்கங்கள் தொடர்பான தகவல்கள், மற்றும் அனுமதிச்சீட்டுக் கையளித்தல் மற்றும் கையேற்றல் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- அனுமதிச்சீட்டுக்கள் விற்றல் நடவடிக்கைகள் கௌரவ அமைச்சரால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தலிற்கு முரணாக தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

- கம்பனியானது அவரகளின் ரூபா 12,826,500 ஆன சேகரிப்பில் மைதானச் செலவினமாக ரூபா 9,929,490 ஆன தொகை செலவழித்திருந்தது.

- போட்டியின் குறிக்கோள்களின்படி, அறநெறி நோக்கத்திற்குப் பயன்படுத்துவதற்காக யுனிசெப் இற்கு

CHECKED

அந்தத் தொகையை கையளிக்கும் நோக்கில் இலங்கை கிறிக்கெட் சபைக்கு (எஸ்சீபீ) கம்பனியால் ரூபா 2,554,609 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், யுனிசெப் இற்கு பணம் கையளித்தமை தொடர்பான சான்றுகள் இருக்கவில்லை.

அதற்கு மேலதிகமாக, இலங்கை மநாட்டுப் பணியகத்தால் புறம்பாக சேகரிக்கப்பட்ட ரூபா 7,897,000 தொகையான அனுமதிச்சீட்டு வருமானம் பணிகத்திற்கோ அல்லது கம்பனிக்கோ கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விமானப் பிரயாண வசதிகளை வழங்கல்

பணியகத்தால் வழங்கப்பட்ட விமானப் பிரயாண வசதிகளை 436 பங்குபற்றுனர்கள் மாத்திரமே பயன்படுத்தியிருந்தனர். எவ்வாறாயினும், தேவைப்பட்ட விமானப் பறப்புகளிகளின் எண்ணிக்கையை கருத்திற் கொள்ளமல், நான்கு சாற்றர் விமானங்கள் ரூபா 58.8 மில்லியன் தொகையான மேலதிக கிரயத்தினைச் செய்வதன் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு மூலம் நடாத்தப்பட்ட புலனாய்வின்படி, 09 பங்குபற்றுனர்கள் மற்றும் ஐஎவ்எவ்ஏ விமானப் பயணிகள் இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னர் கூட 2011 செப்தெம்பர் 30 இறுதிவரை நாட்டிலிருந்து புறப்பட்டிருக்கவில்லை. ஆகவே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஐஎஜஎவ்ஏ இன் பங்குபற்றியோரின் பெயர் பட்டில் போலியான ஆவணமாக அவதானிக்கப்பட்டது. ஆகையால், உண்மையான விமானப் பிரயாணக் கிரயத்தை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iii) தரைவழி பிரயாண வசதிகளை வழங்கல்

தரைவழி பிரயாணத்திற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 8 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், சாதாரண மற்றும் சொகுசு வாகனங்கள் வழங்குவதற்காக முறையே ரூபா 15 மில்லியன் மற்றும் ரூபா 2.5 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தன. கொடுப்பனவுகளானது வாகனங்களின் இலகககங்கள், புறப்படும் மற்றும் வருகைதரும் நேரம் மற்றும் பிரயாண இடங்கள் போன்ற

CHEC...D

அத்தகைய அடிப்படைத் தகவல்களை வைத்திருக்காமல் செய்யப்பட்டிருந்தது. எனவே கொடுப்பனவின் உண்மைத்தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

(iv) தங்குமிட வசதி வழங்கல்

கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்ற தகவலின்படி, 450 விருந்தினர்களிற்கு விழாவில் பங்குபற்றியிருந்தனர். ஆகவே, விருந்தினர்கள் 4 நாட்டகள் தங்குமிட வசதி வழங்குவதற்கு 1800 (450X4) அறை இரவுகள் போதுமானதாக இருந்தது. எவ்வாறாயினும், 3784 அறை இரவுகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அறைகளில் தங்கியிருந்த பங்குபற்றுனர்கள் மற்றும் விருந்தினர்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்காமை காரணமாக அத்தகைய தொகையான அறை இரவுகளின் பயன்பாடு பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டிருந்தது.

**4.2. நிதிகளின் குறைபயன்பாடு**

மீளாய்வாண்டின் போது குறித்த பத்து நாடுகளில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 149 மில்லியன் ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் முறையற்ற செயற்பாட்டுத் திட்டமில் காரணமாக நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 57 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பணியகத்தில் கிடைக்கத்தக்க நிதிகளின் உண்மையான தேவைகளை மதிப்பிடாமல் ஐஉஜஎவ்ஏ விழாவிற்காக 2010 யூன் 02 இல் ரூபா 200 மில்லியன் தொகையான வங்கிக் கடன் பெறப்பட்டிருந்தது. 20 நாட்களின் பின்னர், ரூபா 300,000 ஆன வட்டியுடன் வங்கிக்கு ரூபா 120 மில்லியன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. மீதியான ரூபா 80 மில்லியன் மீளாய்வாண்டின் போது திருப்பிச்செலுத்தப்பட்டிருந்தது. 2011 நவம்பர் மாத இறுதிவரை வட்டியாக ரூபா 10.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த அதேநேரம் இருந்த கடன் மீதியான ரூபா 80 மில்லியன் 2011 நவம்பர் வரை இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக பயனற்ற சொத்தாக வைக்கப்பட்டிருந்தது.

CHECKED

**4.4 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி, பணியகத்தின் அங்கீகரித்த பதவியணி 85 ஊழியர்களாக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது பணியகத்தின் உள்ளபடியான பதவியணி முறையே 46 மற்றும் 57 ஆக இருந்தன. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது மொத்த மனித வள கிரயம் முறையே ரூபா 26.1 மில்லியன் மற்றும் ரூபா 22.4 மில்லியனாக உள்ளன. ஆதலால், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது ஒரு ஊழியரிற்கான கிரயம் முறையே ரூபா 567,391 மற்றும் ரூபா 392,982 ஆக உள்ளன.

(ஆ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் VII ஆம் பிரிவிலுள்ள வேண்டுகைகளைக் கருத்திற் கொள்ளாமலும் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையை மீறியும் ஒப்பந்த அடிப்படையில் பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சேர்க்கப்பட்டிருந்தார்.

**4.5 வாகனங்களின் பாவனை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பணியகத்திற்கு இரண்டு வாகனங்கள் (ஒரு மோட்டார் கார் மற்றும் ஒரு வான்) உடைமையாக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போது ஓடிய தூரம் மற்றும் ஓடிய கிரயம் முறையே 52,313 கிமீ மற்றும் ரூபா 2,681,924 ஆக உள்ளன. ஆதலால், பெறுமானத்தேய்வு பெறுமதி இல்லாமல் கிமீ ஒன்றிற்கான ஓடிய கிரயம் ரூபா 51.26 ஆக இருந்தது.

(ஆ) அதற்கு மேலாக, மீளாய்வாண்டின் போது வாகனங்களை வாடகைக்கு பெற்றதற்காக ரூபா 1,259,859 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பிரயாணம் செய்த தூரம்

CHECKED

46,867 மிமீ ஆக இருந்தது. எனவே, வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களின் கிமீ ஒன்றிற்கான கிரயம் 26.88 ஆக இருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படும் போது மீளாய்வாண்டின் போது வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களின் கிரயம் மற்றும் வாகனங்களின் பேணுகைக் கிரயம் முறையெ ரூபா 652,840 அல்லது 38 % மற்றும் ரூபா 531,584 அல்லது 88 % ஆல் அதிகரித்திருந்தது.

**5. கணக்களி பொறுப்பும் நல்ல ஆளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2011 முதல் 2013 வரைக்குமான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது அமுலாக்க எதிபார்க்கப்பட்ட ஆண்டிலிருந்து பதினெட்டு மாதங்கள் கடந்த பின்னர் 2010 மே 10 இல் நடைபெற்ற சீஓபிஈ கூட்டத்தில் வழங்கப்பட்ட நெறிப்படுத்தலைத் தொடர்ந்து 2012 யூலை 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் திட்டமிடப்பட்ட காலத்தின் போது பணிகள் மற்றும் இலக்குகளுடன் கூடிய முகாமையாளர்களின் பொறுப்புகள் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத்திட்டம்**

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் கயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நடாத்தப்பட்ட செயற்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி அல்லது பௌதீக செயலாற்றல் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நெறிப்படுத்தல்களைக் கருத்திற் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டிருந்தது.

CHECKED

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின்படி, மீளாய்வாண்டு தொடங்குவதற்கு 3 மாதங்களிற்கு முன்னர் பாதீட்டிற்கான சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதிடு மற்றும் உள்ளபடியானவற்றிற்கு இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள்

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையயை வலுப்படுத்தும் நோக்கில் 2007 ஆம் ஆண்டிலிருந்து பணியகத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மேவப்பட்டிருந்தது.

CHECKED

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள்
(ஆ) வெளிநாட்டு நாடுகளில் தாபிக்கப்பட்ட உப அலுவலகங்களின் முகாமைத்துவம்.
(இ) பாதீடு
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) கொள்வனவுகள்
(எ) உள்ளகக் கணக்காய்வு
(ஏ) கணக்கீடும் கணக்கு பதிவுகளும்
(ஐ) பெறவேண்டியவைகளும் செலுத்தப்பட்ட வேண்டியவைகளும்
(ஒ) முற்பணக் கொடுப்பனவுகள்

ஒப்பம் - எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.
*M*

CHEC.. ...........